விலை ரூபா 15.00

REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

01-02-2009

மலர்: 133 இதழ்: 02 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021- 222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# STOP
# THE HUMAN TRAGEDY IN VANNI
## வன்னியின் மனித பேரவலத்தை நிறுத்துக!
### தொடர் உண்ணாவிரதம்

## எம் உறவுகளின் விடுதலை வேண்டி யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு முன்னெடுக்கும் தொடர் உண்ணாவிரதப் போராட்டம்

**வன்னியில் நிகழும் மனித பேரவலத்தை நிறுத்தக் கோரி யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் உண்ணாவிரதப் போராட்டம் கடந்த 28.01.2009 புதன்கிழமை யாழ் மரியன்னை பேராலய வளாகத்தில் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வை யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் ஆரம்பித்து வைத்தார். பல்வேறு சமய, சமூகத் தலைவர்களும், குருக்கள், துறவிகள், பொதுநிலையினரும் இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து வன்னி மக்களின் உடனடி விடுதலைக்காக செபத்திலும், தியாகத்திலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.**




முதல்நாள் நிறைவில் வெளியிடப்பட்ட அறிக்கையை இங்கே தருகின்றோம் :

யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள்,துறவிகள், பொது நிலையினர் மற்றும் அனைத்து சமூக, சமய அமைப்புக்கள் இணைந்து யாழ் தூய மரியன்னை பேராலய வளாகத்தில் தொடர் உண்ணாவிரத முன்னெடுப்பை ஆரம்பித்திருக்கின்ற இன் நாளில் தங்களுக்கு அறியத் தருவது: வன்னி நிலப்பரப்பில் கடந்த பத்துநாட்களில் 400க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் (ஒரு நாளில் மட்டும் முன்னூறிற்கும் அதிக மானோர்) 1400 பேருக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயப் பட்டும், ஊனமாக்கப்பட்டும் உள்ளார்கள்.

காயப்பட்டவர்களுக்கான போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும் மற்றும் வேறு மருத்துவமனைகளுக்கு கொண்டுசெல்லப்பட முடியாத நிலையிலும் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கின்றன.

இறந்து போன பலரின்

(8ம் பக்கம் பார்க்க...)

## முழு உலகுமே தமிழ் மக்களுக்கு எதிராக நின்றாலும் அவர்கள் தமது நீதியான போராட்டத்தை கைவிடமாட்டார்கள்

### ஜேர்மனியில் இருந்து அருட்தந்தை. எஸ். ஜே. இம்மானுவேல்



முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் மனித பேரவலம் தொடர்பாக சர்வதேச சமூகம் மௌனம் சாதிப்பது குறித்து அருட்பணி. எஸ். ஜே. இம்மானுவேல் அவர்கள் பகிரங்கக் கண்டனக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

பொது மக்களின் அவலங்கள் தொடர்பாக இலங்கையிலிருந்து கிடைக்கும் பிந்திய செய்திகள், ஏற்படவிருக்கும் மனித நெருக்கடிகளின் பரிமாணத்தை முன் கூட்டியே அறிவிக்கின்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சகல முனைகளிலும் சுற்றி வளைத்துள்ள இராணுவம் ஆட்லறித் தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.

யுத்த வலயத்துள் பன்னாட்டு ஊடகங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. அரச நிர்வாக அதிகாரிகளும் வெளியேற்றப்பட்டு உள்ளார்கள்.

ஏற்கனவே, வசதிகள் குறைந்த இம்மாவட்டங்களில் இடம் பெயர்ந்தோரின் தொகை அதிகரித்திருக்கின்றது. இன்னொரு நாட்டு மக்கள் மீது படையெடுக்கும் நடவடிக்கை போன்றே அங்குள்ள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் அமைநதுள்ளன.

(3ம் பக்கம் பார்க்க...)

## மிருசுவிலில் இடம் பெயர்ந்த மக்களுக்கு யாழ் ஆயரின் உடன் நிவாரணம்



முடிவின்றி நீண்டு செல்லும் கொடிய யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்களோடும், இழப்புக்களோடும் பதினைந்து மைல்கள் தூரம் நீர் ஏரி ஊடாக கால் நடையாக பசியும் பட்டினியுமாக மரணப்பயத்துடனும் உடுத்த உடையுடனும் வடமராட்சி (தொடர்ச்சி 8ம் பக்கம் )

## பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

# அஞ்சவேண்டாம்! தியாகங்கள் ஒருபோதும் வீண்போவதில்லை

திருச்சபையின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் நடந்த வேதகலாபனைகளின்போது சிந்தப்பட்ட இரத்தங்களும், அர்ப்பணிக்கப்பட்ட உயிர்களும்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இன்று திருச்சபை மாண்போடும், சுதந்திரத்தோடும் வாழ்ந்துகொண்டிருப்பதற்குக் காரணம் என்பது நாம் அறிந்ததே. இதய சுத்தியோடு செய்யப்படும் தியாகங்கள் எப்போதும் பலன் கொடுக்கும் என்பதே இதன் அர்த்தமாகும்.

### அச்சம் நிறைந்த கேள்வி

தமிழ் மக்களாகிய எமது உள்ளங்களில் தற்போதைய சூழ்நிலையில் எழுகின்ற ஒரு அச்சம் நிறைந்த கேள்வி என்னவென்றால், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக எமது மண்ணில் செய்யப்பட்ட தியாகங்கள் எல்லாம் வீணாகிப் போய்விடுமோ என்பதுதான்.

கடந்த மூன்று தசாப்தங்களாக கொடுக்கப்பட்ட உயிர்கள் எத்தனை ஆயிரம். அதுமட்டுமல்லாமல், இம் மண்ணிலே சிந்தப்பட்ட இரத்தங்கள், இழக்கப்பட்ட அவயவங்கள், அழிக்கப்பட்ட சொத்துக்கள், காணாமல் போன உறவுகள், இடம்பெயர்வுகள், பசி, பட்டினி, சித்திரவதைகள் என்று சொல்லிலடங்கா துன்பங்களும், அசௌகரியங்களும் அனுபவிக்கப்பட்டு, இவையெல்லாம் எமக்கு விடிவைக்கொண்டுவரும் என்ற நம்பிக்கையோடு இருந்த எமக்கு, இவைகள் எல்லாம் வீணாகிவிட்டனவா என்று ஐயம் கொள்ளச் செய்கின்றது.

### தியாகங்கள் எப்போதும் பலன் கொடுக்கும்

இங்குதான் நாம் முன்பு கூறிய விடயத்தை மறந்துவிடக்கூடாது. இதய சுத்தியோடு செய்யப்படும் தியாகங்கள் எப்போதும் பலன் கொடுக்கும். ஒருபோதும் வீணாகப்போவதில்லை. ஏனென்றால், ஒரு தியாகம் செய்யப்படுகின்றபோது அது இறை அருளை விளைவிக்கின்றது. (Every sacrifice brings about the Grace of God). அதனால் அதன் பலன் நிச்சயமாக எம்மத்தியில் செயற்பட்டே தீரும்.

ஆகவே, இப்பொழுது நாம் இதுவரை செய்யப்பட்ட தியாகங்கள் வீணாகிவிடுமோ என்று அச்சம் கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. அதை விடுத்து, இதுவரை செய்யப்பட்ட தியாகங்களின் பலனை நாம் அனுபவிக்க வேண்டுமென்றால் இனிமேல் நாம் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியைத்தான் கேட்கவேண்டும்.

### இன்று நாம் என்ன செய்யவேண்டும்?

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசு தான் செய்த தியாகம் முழுமையாகி பலன்கொடுக்க வேண்டுமென்றால் தான் செய்யவேண்டிய ஒரு அலுவல் மீதமாக இருக்கிறது என்பதை உணர்ந்தவராக, "தந்தையே இவர்களை மன்னியும்" என்ற செபத்தைச் சொல்லி தன்னைத் துன்புறுத்தியவர்களை மன்னிக்கிறார். இயேசுவினுடைய இந்த மன்னிக்கும் செயல்தான் அவர் சிந்திய இரத்தம், அவர் அனுபவித்த பசி, தாகம், சித்திரவதை, அசௌகரியங்கள், அவர் ஈந்த உயிர், இவை அனைத்தையும் பலன்கொடுப்பவையாக மாற்றியது.

முதல் வேதசாட்சி ஸ்தேவான் என்னும் முடியப்பரும் இதே வார்த்தைகளைச் சொல்லி உயிர் துறந்தார் என்பதும் எமக்குத் தெரியும். வேதசாட்சிகளினதும், புனிதர்களினதும் மன்னிக்கும் செயல்கள்தான் இன்றைய எமது உயிரோட்டமுள்ள திருச்சபையின் அடி அத்திவாரங்கள்.

இதனால்தான் எமது வரலாறும் தோல்வியிலே முடியாத, பலன்கொடுக்கின்ற வரலாறாக மாற இன்று நாம் செய்யவேண்டியதும் இதுவேதான். பகைமைகள் எல்லாம் மறக்கப்படவேண்டும். ஒருவர் ஒருவரை மன்னிக்க வேண்டும். இயேசுவும், புனிதர்களும் குற்றமற்றவர்களாதலால் அவர்கள் மற்றவர்களை மன்னிக்க வேண்டியவர்களாக மட்டுமே இருந்தார்கள். ஆனால், நாமோ மற்றவர்களை மன்னிப்பதோடு, நாமும் பல வழிகளில் குற்றவாளிகளாக இருப்பதால் மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டியவர்களாகவும் இருக்கின்றோம் என்பதை மறக்கக்கூடாது.

அப்போதுதான் செய்யப்பட்ட தியாகங்களுக்கான பலனை நாம் அனுபவிக்கலாம். மாறாக, தொடர்ந்தும் பகைமைகளுக்குத் தூபம் போடுபவர்களாகவும், மேலும் குற்றங்கள் புரிபவர்களாகவும், பழிவாங்கும் நடவடிக்கைகளை ஆசிப்பவர்களாகவும் வாழமுற்படுவோமென்றால் எமது வாழ்வு மேலும் இருளுக்குள் சென்றுகொண்டிருக்குமேயொழிய, நாம் விடியலைக் காணமுடியாது.

### மன்னிக்கும் செயல் வேதனை நிறைந்தது

பகைவரை மன்னிப்பது என்பது இலகுவான ஒரு விடயமல்ல. அது சிலுவையிலே தொங்குவது போன்ற வேதனையான விடயம். அதாவது தமிழ் மக்களாகிய நாம் இதுவரை செய்த தியாகங்களைவிட மேலான தியாகம். எமது மக்களின் விடிவுக்காக இதுவரை நான் ஒன்றும் செய்யவில்லையே என்று யாராவது நினைத்தால் இந்த மன்னிப்புச் செயலை செய்து யாரையும் வெறுக்காமல், அனைவரையும் அன்பு செய்ய முன்வந்தால் அது ஒன்றே போதுமானதாகும்.

இயேசு மரித்தபடியால்தான் உயிர்த்தெழுந்தார் என்று சொல்வதைப் பார்க்கிலும், இயேசு மன்னித்தபடியால் தான் உயிர்த்தெழுந்தார் என்று சொல்வது அதிக பொருத்தமானதாகும்.

### செப தபம் இன்றி முடியாத காரியம்

எல்லாரையும் மன்னித்து ஏற்று அன்பு செய்யும் பக்குவத்தை நாமும், எம் பகைவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அது மனித சக்தியால் முடியாதது. இதற்கு இறையருள் வேண்டும். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இம்மண்ணிலே செய்யப்பட்ட தியாகங்களினால் விளைந்த இறை அருள் நாம் இம் முயற்சியை மேற்கொள்ளும்போது நிச்சயமாக எமக்குப் பயன்படும். அத்துடன் நாம் இன்று மேற்கொள்ளும் செப, தப முயற்சிகளெல்லாம் எமக்கும், எல்லாருக்கும் இந்த சக்தியைப் பெற்றுத்தரவேண்டும். ஆன்மீக பலமின்றி இவ்வுலகிலே நாம் எந்த ஒரு செயலிலும் வெற்றி பெறமுடியாது.

**அஞ்சவேண்டாம்**
**தியாகங்கள் ஒருபோதும் வீணாகாது**
**இன்று நாம் செய்யவேண்டியதைச் செய்தால்...**
**மன்னிப்போம்! மன்னிப்புக் கேட்போம்!!**

**அருட்தந்தை. ப. யோ. ஜெபரட்ணம்**

# வன்னியில் மனித பேரவலத்தை நிறுத்துக!

## தொடர் உண்ணாவிரத போராட்டத்தின் இரண்டாம் நாள் வெளியிடப்பட்ட அறிக்கை

யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள்,துறவிகள்,பொதுநிலையினர் மற்றும் பிற சமய, சமூக அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் யாழ் பேராலய வளாகத்தில் ஒன்று கூடி வன்னியில் நிகழும் மனித அவலத்தை நிறுத்தக் கோரி நடாத்தி வரும் தொடர் உண்ணா விரதத்தின் இரண்டாம் நாளாகிய இன்று உண்ணாவிரதிகளாகிய நாம் பின்வரும் வேண்டுகோளை முன் வைக்கிறோம்.



26ம் திகதி திங்கட்கிழமை வன்னியில் அகோர எறிகணை வீச்சில் 300க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் 1000க்கு மேற்பட்டோர் காயமடைந்த பின்பும் செவ்வாய்கிழமை 27ம் திகதி, இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ் மக்களுடைய பாதுகாப்பு தொடர்பாகக் கலந்துரையாடக் கொழும்புக்கு வருகை தந்திருந்த அதே நாளில் மேலும் 46 பேர் கொல்லப்பட்டும் 76 பேருக்கு மேல் காயமடைந்தனர். நேற்றைய தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில 21 பொதுமக்கள் கொல்லப்பட்டு 121 பேர் காயமடைந்துமுள்ளனர். இறந்த காயமடைந்தவர்களினதும் பெயர் விபரங்களும் வெளியிடப்பட்டன .

வன்னிப்பகுதியில் பணியாற்ற அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனமாகிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது பிந்திய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

குறைந்தபட்ச வைத்திய வசதிகள், ஆளணிகளோடு இயங்கும் மருத்துவமனைகள் காயப்பட்ட நூறறுக் கணக்கானோராலும் கொல்லப்பட்ட உடலங்களாலும் நிரம்பி வழிகின்றன. அம்புலன்ஸ் வாகனங்கள் கூடத் தாக்குதல்களில் இலக்காகியுள்ளன.

காயப்பட்டோரை காப்பாற்ற முனைந்த தொண்டர்களும் காயமடைந்துள்ளனர்.

250,000க்கும் மேற்பட்ட மக்கள் 250 சதுர கிலோ மீற்றர் பரப்புக்குள் முடக்கப்பட்ட நிலையில் பாதுகாப்புத் தேடக் கூட இடமற்று அவலப்படுகின்றனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிக அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட நூற்றுக் கணக்காணோர் காத்துக்கிடக்கின்றனர்.

காலம் விரையமாகிக் கொண்டு இருக்கின்றது. இரத்தக்களரியை நிறுத்துவதற்கு உறுதியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.

போரை நிறுத்தி தமிழ்மக்களுடைய நியாயமான கோரிக்களை நிறைவு செய்யக் கூடிய தீர்வை முன்வைக்குமாறு உலக நாடுகள் தொடர்ச்சியாக வேண்டு கோள்களை முன்வைத்நிலையிலும் பொது மக்கள் இலக்குகள் மீதான இராணுவத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமாய் உள்ளன.

சர்வதேச சமூகத்தினதும் மனித உரிமைகள் அமைப்புக்களினதும் தொடரும் செயற்பாடற்ற தன்மை எம்மை மிகவும் கவலையில் ஆழ்த்துகின்றது.

ஆகவே நாங்கள் ஒருங்கிணைந்து மீண்டும் பின்வரும் வேண்டுகோள்களை முன்வைக்கின்றோம்:

1. வன்னியில் தொடரும் மனித அவலத்தை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பையும் கேட்டுக் கொள்கின்றோம்.

2 உடனடிப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டுகின்றோம்.

3. நீதியான அரசியல் தீர்வை முன்வைத்து பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வை நடைமுறைப் படுத்த வேண்டுகின்றோம்

**உண்ணாவிரதிகள் சார்பில்**

## வன்னி மக்களின் அவலங்கள் தீர தொடர் செபமாலைத் தியானம்

வன்னியில் போர் முனையில் அகப்பட்டு துன்புறும் மக்களின் விடுதலை வேண்டி மரியன்னையிடம் மன்றாடும் தொடர் செபமாலைத் தியானம் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9மணி முதல் பிற்பகல் 2 மணிவரை குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் நடைபெற்று வருகிறது. இதனை கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. றெக்ஸ் சவுந்தரா அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்.

## வன்னியில் துயருறும் மன்னார் மறைமாவட்ட மக்கள்

### மன்னார் ஆயரின் வேண்டுகோள்

மன்னார் மறைமாவட்டத்தின் 25 வீதமான மக்கள் இடம்பெயர்ந்து வன்னியில் தற்போதைய நெருக்கடியில் பெருந் துன்பங்களோடு வாழுகின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. மாந்தை மேற்கு, மடுப்பிரதேச மக்களும் அங்கு பணியாற்றும் குருக்களும் வன்னியில் எமது மறைமாவட்ட மக்களோடு ஒரு குறுநிலப்பரபினில் உயிரிழப்புக்களைச் சந்தித்தவாறும், காயப்பட்டவாறும், உணவு. உடை, உறைவிடமின்றியும் அல்லலுறுகின்றார்கள். இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறும், இவர்களுக்காக செபிக்குமாறும் மன்னார் ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசப் ஆண்டகை உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். எங்கள் செப, தப செயற்பாடுகளில் அவர்களையும் நினைத்துக்கொள்வோம்.

## குடும்பங்களின் அழகை மீண்டும் அனுபவிப்போம்

### 6வது உலக குடும்ப தினத்தையொட்டி திருத்தந்தை

6வது உலக குடும்ப தினம் கடந்த மாதம் 14ம் திகதி மெக்சிக்கோவில் நடைபெற்றபோது இதையொட்டி திருத்தந்தை வெளியிட்ட செய்தியில், குடும்பங்களின் அழகையும் மாண்பையும பற்றி சிந்திப்பதற்கு இது ஒரு உன்னத சந்தர்ப்பம் என்று கூறினார். சமூகத்தினதும், திருச்சபையினதும் அடித்தளங்களாகிய குடும்பங்களில் மிளிரவேண்டிய விழுமியங்களால் தான் சமூகத்தின் உயர்வும், திருச்சபையின் சிறப்பும் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் 7000 குடும்பங்களின் போட்டோக்களை கொண்டு உருவாக்கப்பட்ட திருத்தந்தையின் உருவப்படம் அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**(எமது மறைமாவட்டத்திலிருந்து இதில் இடம் பிடித்த குடும்பங்களை 6ம் பக்கத்தில் காணலாம்.)**

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு.ஜே.ஏ அருள்தாசன்

## பொதுக்காலம் 4ம் ஞாயிறு

"ஆற்றல் மிக்கவரே ! இறைமகனே! இயேசுவே உம் ஆற்றலினால் தீமைகளை எம்மிடமிருந்து அகற்றுமையா!"

'அவர்கள் அனைவரும் திகைப்புற்று" இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே!

''இவர் தீய ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார் அவையும் இவருக்கு கீழ்படிகின்றனவே!" என்று தங்களிடையே பேசிக் கொண்டனர்." (மாற் 1:2)

விரும்பியோ விரும்பாமலோ மனிதன் இருளடர்ந்த அறியாமைக்குள்ளே அகப்பட்டு தீமையின் ஆட்சிக்குட்பட்டுத் துன்புற்று அதிலிருந்து விடுபடத் துடிப்பது வெளியரங்கமான நிதர்சம். ஆயினும் அத்தீமையினை வெற்றி கொண்டு அதில் அகப்பட்டாலும் அதை முறியடிப்போரும் சிலரே, இவர்கள் இறைவனின் சாயலை கிறிஸ்துவிடமிருந்து முழுமையாகப் பெற்று அவரின் வலிமையைத் தாங்கி அவராகவே வாழ்பவர்கள். அவர்கள் இருளின் அறியாமையின் ஆட்சிக்குட்பட்டவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் பேரொளியாம் கிறிஸ்துவால் உள் ஒளி பெற்ற ஒளியின் மக்கள்.

திருமுழுக்கினால் கிறிஸ்துவின் சீடரான நாமனைவருமே ஒளியின் மக்கள். அவர்கள் கிறிஸ்து நிலைப்படுத்திய இறையரசுக்கு சொந்தமானவர்கள். இறை அரசு என்பது எல்லா அடிமைத்தனங்களிலிருந்தும் அக விடுதலை பெற்றுக் கொடுக்கும் அமைதியின் அரசு. அது இறைவனுக்கு சொந்தமான மக்களை ஒருங்கிணைத்த அமைப்பு ஆகும்.

எனவே நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும் இவ்வுலகிற்குச் சொந்தமானவர்களல்ல. இவ்வுலகைச் சார்ந்தோர் இருளின் ஆட்சிக்குட்பட்டவர்கள். இவ்வுலகின் இருளின் ஆட்சிக்குட்பட்டவர்கள் போர், பழிவாங்குதல், கோபம், வன்மம், வைராக்கியம், மமதை, அகந்தை போன்றவற்றை உடமைப் பொருளாக்கி அதன் ஆளுகைக்கு உட்பட்டுத் துன்புறுகின்றனர். இறையரசின் கிறிஸ்தவ விழுமியங்களை புறக்கணித்து வாழும் ஆளும் உலக தற்கால அரசுகளுக்கிடையே மிகுந்துள்ள துன்பியல் கோரக் கொடுமைகளுக்கு அவர்கள் தேர்ந்து உட்பட்டுள்ள உலகுசார் கோட்பாடுகளே அடிப்படைக் காரணமாகும்.

இஸ்ரேயலின் முதல் இறைவாக்கினரான மோயீசன் தனக்குப் பின் தம்மைத் தொடர்ந்து வரும் இறைவாக்கினருக்குச் செவிசாய்க்குமாறு கூறினார். இறைவனிடமிருந்து முதன் முதல் சட்டங்கள், இறைவாக்கை இஸ்ரேயலருக்கு கொடுத்து உடன்படிக்கையின் நடுவராக விளங்கினார்.

புதிய ஏற்பாட்டில் புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டாளராக புதிய மோசேயாக கிறிஸ்து விளங்குகிறார். அவர் அதிகாரத்தோடு கற்பித்தார். அத்தோடு இறைவார்த்தையாகவும் விளங்கினார். இறைவன் கிறிஸ்து வழியாக மனிதரோடு வல்லமை மிகுந்தவராய் பேசினார். தீமைகள் யாவும் அவரது முன்னிலையில் முற்றிலும் முறியடிக்கப்பட்டன.

" பல முறை பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்வீறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். ( எபி 1: 1 – 2 )

இவ்வாறு கிறிஸ்து தந்தையோடு கொண்ட உறவை அடித்தளமாகக் கொண்டு இறையரசை வல்லமையோடு போதித்து தம் செயல்களால் அதை உறுதிப்படுத்தினார். திருமுழுக்கு யோவான் இயேசுவை "உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறி" என்றார். பேதுரு அவரை "மெசியா" என்றார். தீய ஆவிகள் அவரை "கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்றன.

நாங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவை எத்தகையவராக காணுகின்றோம்? எமக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான உறவு எத்தகையதாக உள்ளது.?

கிறிஸ்துவுக்கும் எமக்குமிடையிலான உறவு பிளவுபடாத உள்ளத்துடன் உறுதியுள்ளதாக அமைதல் வேண்டும்.

பாவச்சார்பு எண்ணங்கள் மற்றும் பாவச் சோதனைகளால் எமது மனித இதயம் இருட்டடிப்புச் செய்யப்படாமலும் கிறிஸ்துவோடு நாம் கொண்டுள்ள உறவு பாதிப்புறாமல் இருக்கவும் மனதில் கிறிஸ்துவை உறுதியுடன் பற்றி வாழ எம் சொல் செயல் சிந்தனைகளை இறைவனுக்கே அர்ப்பணமாக்குவோம். இயேசுவை எம்மில் வளர விடுவோம். இயேசுவே எம்மை ஆட்சி செய்வாராக.

## பொதுக்காலம் 5ம் ஞாயிறு

இயேசுவே உம் முன்னிலையில் எம் இன்னல்கள் கதிரவன் முன் காரிருளாய் மறைந்திடுமோ "பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை அவர் குணப்படுத்தினார்." (மாற் 1:34 )

நீருக்காக ஏங்கும் கலைமான் போலவும் வான் மழைக்காக ஏங்கும் வாடிய வான்பயிர் போலவும் நிம்மதிக்காக மனித குலம் எப்போதும் ஏங்கித் தவிக்கிறது. இது காலாதி காலமாக ஒவ்வொரு தனிமனித வாழ்விலும் விதிவிலக்கின்றி நிகழும் தொடர்கதையாக உள்ளது.

" மண்ணில் வாழ்வது மனிதருக்கு போராட்டம்தானே ? ......... வெறுமையான திங்கள்கள் எனக்கு வாய்த்தன. இன்னலமிகு இரவுகள் எனக்கு பங்காயின........" (யோபு 7:3 )

துன்பம் தொடர்கதையாக மனிதனைத் தொடர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது இறைவனின் உடனிருப்பில் நிலைத்திருந்து செபத்தில் இறைவனின் தஞ்சத்தையும் தயவையும் தேடுபவர்கள் தம் வாழ்வில் நிலை குலைந்து போவதில்லை என்பதற்கு யோபுவின் வாழ்க்கைப் பாடம் ஒரு உன்னத எடுத்துக்காட்டு.

திருத்தூதரான தூய பவுல் கிறிஸ்துவின் பணியாகிய நற்செய்திப் பணிக்காக தம்மை முற்றும் அர்ப்பணித்து அதற்காக பல இன்னல்களையும் தாங்கிக் கொண்டார். ஆயினும் அவரை சுமையும் அழுத்தவில்லை துன்பமும் அவரை துவண்டு விடச்செய்யவில்லை .

"நாங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து கொள்கிறோம்" ( 2 கொரி 4 : 8- 10 )

இயேசுவும் இவ்வாறே ஓய்வின்றி உறக்கமின்றி நாடோடி போலப் பட்டி தொட்டியெல்லாம் சுற்றி நற்செய்தி அறிவித்து நோய்நொடியால் மற்றும் பசாசினால் பீடித்து வருந்தியவர்களை குணமாக்கினார். இவ்வகையில் உதவியற்று கதியற்று வருத்தியவர்களுக்கு கிறிஸ்து உதவிக்கரமானார். பேதுருவின் மாமியார் உதவியற்றுப் பிணியால் வருத்திய நிலையில் இயேசு அவரை கைதூக்கி விடுகிறார்.குணமளித்தார்.

" ஏழைகளைத் தூசியிலிருந்து அவர் தூக்கி நிறுத்துகின்றார். வறியவரை குப்பை மேட்டில் இருந்து கைதூக்கி விடுகின்றார்." (தி.பா113 :7 )

யார் யார் கிறிஸ்துவைத் தம் வீட்டில் வரவேற்றார்களோ அவர்களை இயேசு விடுதலை வாழ்வுக்கு இட்டுச் சென்று அவர்களின் வாழ்வை நலன்களால் நிரப்பினார்.

" இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன் அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்" (தி.வெ 3:20)

மாத்தா மரியா இயேசுவை தம் வீட்டில் வரவேற்றதால் லாசரின் பிரிவுத்துயர் நீங்கியது. லாசரும் உயிர் பெற்றார். சக்கேயு இயேசுவைத் தம் வீட்டில் வரவேற்றதால் புது வாழ்வு கண்டார். பேதுரு அவரைத் தம் வீட்டில் வரவேற்றதால் பேதுருவின் மாமியார் பிணி நீங்கி நலன் பெற்றார். கிறிஸ்தவர்கள் எம்மாத்திரம் கிறிஸ்துவை தம் வீட்டின் தலைவராக வரவேற்று அவரை வாழ வைக்கின்றனர் என்பது அவர்களுடைய குடும்ப நேரிய பிரமாணிக்கமான உயரிய வாழ்கை பண்பிலிருந்து வெளிப்படும் ஒன்றாகும்.

இறைபற்றாலும் பக்தியாலும் கிறிஸ்துவை எம் இல்லங்களில் வரவேற்று ஒன்றித்த குடும்ப செப வாழ்வால் இயேசுவின் இறை பிரசன்னத்தை நிலைப்படுத்தி தீமையின் பிடியிலிருந்து விடுபட்ட உத்தம மக்களினமாக இகமதில் இனிதே வாழ்வோமாக.

## முழு உலகுமே...

இன்னும் ஓரிரு மாதங்களில் யுத்தம் முடிவடைந்து விடும் என்றும் அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தமிழ் மக்களின் கோரிக்கைகளும் எப்போதுமே மெளனித்து விடும் என்ற எதிர்பார்ப்பே, தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் இலங்கையின் பூர்வீகக்குடிகள் பெரும்பான்மை சிங்கள மக்களே என்ற நம்பிக்கையும் ஊட்டப்பட்டு வருகிறது. பிராந்தியத்தின் சக்தி மிக்க நாடான இந்தியா உட்பட பன்னாட்டு சமூகமானது பல தசாப்தங்களாகத் துன்பப்படும் தமிழ் மக்களின் துயரங்கள் தொடர்பான தமது பொறுப்பை ஒதுக்கிவைக்க முடியாது.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை கண்டு கொள்ளாமல் யுத்த நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுவது தொடர்பான சக்தி வாய்ந்த நாடுகள் ஆற்றி வரும் பங்களிப்பானது, பன்னாட்டு சமூகத்தின் பாசாங்குத்தனத்தையும் இரட்டை வேடத்தையுமே வெளிப்படுத்துகிறது. இது தமிழ் மக்களின் மனதில் இருந்து ஒரு போதும் அழியப் போவதில்லை.

முழு உலகுமே இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக நின்றாலும் அவர்கள் தமது நீதியான போராட்டத்தையும் விருப்புகளையும் கைவிடக் கூடிய நிலையில் இல்லையென்பதை அக்கறையுடைய சகலரும் விளங்கிக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

# வள(னா)ர் பப்பா பதில்கள்

**1. கேள்வி :** வளனாரே! திருவழிபாடு ஆங்கிலமொழியில் Liturgy என அழைக்கப்படுகிறதே இந்த ஆங்கிலச் சொல்லின் அர்த்தம் என்ன?

**சேவியர், நல்லூர்.**

**பதில் :** பிற மொழி மீதான உமது ஆர்வம் பாராட்டுக்குரியது. தாய் மொழியையும் கவனித்துக் கொள்ளும். Liturgy என்ற ஆங்கிலச் சொல் 'லெய்த்தூர்கியா' எனற கிரேக்கச் சொல்லில் இருந்து பிறந்தது. மக்களுக்காக ஆற்றப்படும் பணி என்பதுதான் கிரேக்கத்தில் இதன் பொருள். இறைவனுக்கு ஆற்றப்படும் பணியாகிய திருவழிபாட்டைக் குறிக்கவும் கிரேக்க சமயத்தில் இச்சொல் (லெய்த்தூர்கியா) பயன்படுத்தப்பட்டது. பின்னர் கிறிஸ்தவ வழிபாட்டைக் குறிக்க திருச்சபை இச்சொல்லை பயன்படுத்தியது. இப்ப புரிகிறதா வாழ்வும் வழிபாடும் ஒன்றென்று.

**2. கேள்வி :** வளனாரே! பெற்றோரைக் கவனிக்காமல் கைவிடும் பிள்ளைகள் பற்றி என்ன நினைக்கிறீர்?

**சுதா,பண்டத்தரிப்பு.**

**பதில் :** இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது. அந்த பிள்ளைகளின் பிள்ளைகள் தமது முறையைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான் அல்லவோ! காலம் பதில் சொல்லும். அதுவும் தவறினால் கடவுள்.

**3. கேள்வி :** அன்புள்ள பப்பாவுக்கு! பூச்சி புழுக்கள் சிறுபிராணிகளை கொல்வதை பாவ சங்கீர்த்தனத்தில் கொலை செய்தேன் என்று அறிக்கையிடலாமா?

**சுஜி, குருநகர்.**

**பதில் :** இப்படியெல்லாம் கேள்வி கேட்டு ஏன் என்னை கொல்கிறீர்கள்? மனித உயிர்களை கொலவதுதான் ஐந்தாம் கற்பனைக்கெதிரான கொலை என்ற சாவான பாவம். ஆனால் சிறு உயிர்களை அவசியமின்றி கொல்வதும் தவறு. அவற்றிற்கும் இரக்கம் காட்ட வேண்டும்.

**4. கேள்வி :** Hello பப்பா! ஒரு புதுக்கவிதை சொல்லுங்களேன்.

**கமல்நாதன், OLR.**

**பதில் :** குழந்தையில் போட்ட ஆடையென்று
கழற்றி வைக்க முடியாதபடி யுத்தம்

**5. கேள்வி :** அன்புள்ள வளர்ப்பப்பா! இன்றைய பள்ளி மாணவர்கள் தங்கள் பேர்சில் சினிமா நடிக/நடிகைகளின் படங்கள் வைத்திருப்பது பற்றி என்ன சொல்கிறீர்?

**சயந்தன், சுன்னாகம்.**

**பதில் :** கலாரசிகர்கள்! அவர்கள் நடிக/ நடிகைகளின் படங்கள் வைத்திருப்பதன் முலம் தாம் படிக்கவில்லை படிப்பதாக நடிக்கிறோம். என்பதை குறியீடாகச் சொல்கிறார்களோ!

**6. கேள்வி :** அன்புள்ள பப்பாவுக்கு!
ஞாயிறு மறைக்கல்விக்குப் போகாமல் ரியூசன் வகுப்புக்களுக்குச் செல்லும் கத்தோலிக்க கிறிஸ்தவக் குழந்தைகளைப் பற்றி நீர் என்ன சொல்கிறீர்?

**டேவிட், கொய்யாத்தோட்டம்.**

**பதில் :** எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? என்றொரு முதுமொழியுண்டல்லவா? அக் குழந்தைகளின் பெற்றோருக்கு மறைக்கல்வியில் உடன்பாடு (conviction) இல்லாதவரை ஞாயிறு ரியூட்டறிகள் நிரம்பி வழியத்தான் செய்யும். குடும்பத்தில் கிறிஸ்தவ சூழலை உருவாக்க, மறையறிவு வேண்டும். மறையறிவு பெற ஞாயிறு மறைக் கல்வி வேண்டும். ரியூசன் இவ்வுலக வாழ்வுக்கு வேண்டும்தான். ஆனால் மறைக்கல்வி நிலைவாழ்வுக்கு வேண்டுமல்லவா! பெற்றோரே சற்றுக் கவனிங்கப்பா.

**7. கேள்வி :** Dear Pappa! திருமணத் திருப்பலிகளுக்கு வீடியோ எடுப்பது பற்றி உமது கருத்து என்ன?

**கஜன், யாழ்ப்பாணம்.**

**பதில் :** வீடியோ எடுப்பது நல்ல விஷயம்தான். ஆனால் சிலர் உயிரையுமல்லவா எடுக்கிறார்கள். அதிக நேரம் வீட்டில் எடுத்துவிட்டு, கோவிலுக்குக் கிளம்பி வருவதால் திருப்பலிக்குக் குறித்த நேரம் நிமிடக் கணக்கிலல்ல, மணிக்கணக்கில் கடந்து போய் விடுகிறது. கஸ்ரப்பட்டு போட்ட ஒப்பனைகளும் கலைந்து மணமக்கள் அலங்கோலமாக காட்சி தருகிறார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சுதான் பாருங்கோ.

**8. கேள்வி :** வளர்ப்பப்பாவே! ஒழுங்கற்ற மின்விநியோகம் காரணமாக எமது மேய்ப்புப் பணி சபைக் கூட்டத்தை மெழுகுதிரி வெளிச்சத்தில் நடாத்துவதால் அதை விரைவாகவே முடிக்கவேண்டியிருக்கிறதே. இப்பிரச்சினையை நிவர்த்தி செய்ய உமது ஆலோசனை என்ன?

**பதில் :** பாஸ்கா திரியைக் கொழுத்தவும்.

**9. கேள்வி :** Hello Pappa! புதிய வருடம் எப்படி இருக்கப்போகிறது?

**சுயா, சாவகச்சேரி.**

**பதில் :** கலண்டரின்படிதான்! இறை நம்பிக்கை, கடின உழைப்பு, கொஞ்சம் பிறர்நேசம்.... இவற்றோடு இந்த ஆண்டைத் தொடங்கும். இறைவன் உம்மை ஆசீர்வதிப்பார்.

**10. கேள்வி :** அன்புள்ள வளனாரே! ரெலிபோன் வந்துவிட்ட பிறகு, கடிதத்திற்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டது பற்றி உமது கருத்து என்ன?

**தயா, ஊர்காவற்றுறை.**

**பதில் :** இரண்டு தொடர்பாடல்களுக்கும் அவற்றிக்குரிய தனித்துவம் உண்டென்றாலும், கடிதத் தொடர்பின் தனித்துவம் தனி. எம் உறவுகளுக்கு மனந்திறந்து நாம் எழுதும் வார்த்தை வரிகள் (நல்லவை) காலங்கடந்தும் மீட்டுப்பார்த்து இன்புறத்தக்கவை. ஆனால் ரெலிபோன் பில்களோ, Kit காட்டுக்களோ உமக்கு மாரடைப்பைத்தான் ஏற்படுத்தக்கூடியவை. (நீர் Missed Call கொடுக்காதவராக இருந்தால் மட்டும்) கடிதம் late ஆக வந்தாலும் இப்பவும் latest தான்.

# தூய பவுலின் திருமுகங்களுக்கோர் பின்னணி

**கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகம்** S. அன்ரனிப்பிள்ளை, மறை ஆசிரியர்

**தொடர்ச்சி...**

1. யெருசலேம் சபை ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு கேட்டிருந்த நன்கொடையை கொரிந்துச் சபையினர் திரட்டத்தொடங்கி விட்டனர் என்று தெரிய வந்தது.
2. எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவில் தான் பெற்றெடுத்த மக்கள் ( கொரிந்து ) நன்னெறிப் பாதைக்கு திரும்பிவிட்டனர் என்பதையும் தூயபவுல் அறிந்து கொண்டார்.

உளப்பூரிப்பும் மனமகிழ்ச்சியும் நிறைந்த தூயபவுல் தனது இதயப்பூரிப்பை ஒரு மடலின் வழியாகத் தெரிவிக்கத் தீர்மானம் செய்தார். இம்மகிழ்வின் விளைவே இரண்டாம் திருமுகம். கொரிந்து கிறிஸ்தவர்கள் வாழ்வில் நிகழ்ந்த திருப்பம் கண்டு மகிழ்ந்த தூயபவுல் தன் மகிழ்ச்சியையும் அன்பையும் நன்றியையும் கொரிந்தியருக்கு அள்ளிவழங்கும் திருமுகமே இவ்விரண்டாம் திருமுகம்.

**5) திருமுகத்தின் ஆசிரியர்:**

கி.பி இரண்டாம் நூற்றாண்டை சார்ந்த முரத்தோரி தொகுப்பில் தூய பவுல் கொரிந்தியர்களுக்கு இரண்டு திருமுகங்கள் எழுதினார் என்று, குறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்திலிருந்தே புதிய ஏற்பாட்டில் இடம் பெறும் இரு திருமுகங்களும் பவுலால் வரையப்பட்டன என்னும் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**6) திருமுகத்தின் நோக்கம் :**

1. திருத்தூதரான தூய பவுல் மேன்மையும் அதிகாரமும் கொரிந்து சபையில் உறுதிபெற வேண்டும். குழப்பம் விளைவித்த போலிப் போதகர்களால் கொரிந்தியர் பவுலுக்கு காட்டிய மரியாதையும் அன்பும் குறைந்திருந்தது. ஆனால் உடைந்த உள்ளத்தோடும் கலங்கிய கண்களோடும் எழுதிய மடலைப் பெற்ற கொரிந்தியர்கள் தங்கள் தவறை உணர்ந்து பவுலுக்கு மீண்டும் மரியாதை காட்டுகிறார்களென்று தீத்து வழியாகத் தெரிந்து கொண்டார். இதை சரியான முறையில் உறுதிப்படுத்த விரும்பினார். அதன் போது தான் தோன்றிப் போதகர்களை கொரிந்தியர் புறக்கணிக்கவும் தண்டிக்கவும், தயாராயிருப்பதாகவும் அறிந்து வந்தார். ஆர்வம் மிதமிஞ்சி செல்லக்கூடும் என அஞ்சினார். "நேர்மையைக் காட்ட உங்களுக்கு எத்துனை ஆவல் ! எத்துனை உள கொதிப்பு! என்மீது எத்துனை அச்சம் ! என்னைக்காண எத்துனை ஏக்கம் ! எத்துணை ஆர்வம் ! எனக்கு மனவருத்தம் அளித்தவனிடம் எத்துணைக் கண்டிப்பு!" (7 : 1) என்பார் தூய பவுல்.

கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவத்தில் எவ்வளவோ ஆர்வம் இருந்தது. இருப்பினும் அவர்கள் திருத்தூதரின் அழைப்பையும் பணிப்பையும் பற்றி இன்னும் போதுமான தெளிவு கொள்ளவில்லை என்பதை உணர்ந்த பவுல் முதல் 7 அதிகாரங்களில் இவைகளைப் பற்றி விவரிக்கின்றார்.

2. நற்கொடை திரட்டுதல் முற்றுப் பெற வேண்டும். இரு சகோதரர்களுடன் தீத்து இப்பணியைச் செய்து முடிக்கப் பரிந்துரை செய்கிறார். நன்கொடை திரட்டுதல் விவேகமாக நடத்தப்பட வேண்டும் என்று உற்சாகம் மூட்டுகின்றார். (அதி :8 – 9 )

3. போலிப் போதகர்களின் வஞ்சக நோக்கத்தை அவர்களது உண்மையான உருவத்தை வெளிப்படுத்துகிறார். முன்பு கூறியது போல் பவுல் கொரிந்து விசுவாசிகளை விருந்தசேதனக் கட்சியை சேர்ந்தவர்களின் ஆதிக்கத்தில் கொண்டு வர முயன்றார். இவர்கள் யெருசலேம் திருச்சபை அதிகாரிகளிடமிருந்து பரிந்துரைக் கடிதங்கள் பெற்றிருந்ததாகவும் காட்சிகளும் வெளிப்பாடுகளும் இவர்களுக்கு கிடைத்துள்ளதாகவும் மெய்யறிவும் தேவ ஏவுதலில் இறைவாக்குரைக்கும் வரங்கள் பெற்றிருப்பதாகவும் கூறினார். பவுலோ நாவன்மையற்றவர் என்றும் வலுவற்றவரென்றும் தோற்றமற்றவரென்றும் சபையிலிருந்து பொருளுதவி பெற தகுதியில்லாததால் கேட்பதற்கும் பெறுவதற்கும் மறுக்கிறார் என்றும், பதிலாக ஏழைகளுக்குப் பணம் திரட்டுவதாக பொய் சொல்லி அத்தொகையைப் பெரும்பாலும் அவருடைய சொந்த தேவைகளுக்கே பயன்படுத்தி கொள்கிறார் என்று கூறி அவரை அபாண்டமாகப் பேசித் தூற்றினர். இவர்களைத்தான் பவுல் இறுதி மூன்று அதிகாரங்களிலும் தாக்குகிறார். தம்முடைய திருத்தூதரின் மேன்மையையும் அதிகாரத்தையும் தாக்குபவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கிறார். போலித்திருத்தூதர்களை எண்ணி நகையாடி வன்மையாக கண்டிக்கிறார்.

**7) திருமுகத்திற்குப்பின் :**

தான் எழுதிய திருமுகத்தைப் பவுல் மீண்டும் தீத்து வழியாகக் கொரிந்துச் சபைக்கு அனுப்பினார். சிறிது காலத்திற்குப்பின் தூய பவுலே கொரிந்திற்குச் சென்று மூன்று மாதங்கள் தங்கியிருந்தாரென்று திருத்தூதர் பணியில் காண்கின்றோம். (20:3)

**தொடரும்...**

# ஆன்மீக படைப்புக்களை அளிப்பவர்கள் வேதாகம அறிவைக் கொண்டிருக்க வேண்டும்

**– நவாலியூர் நாயகி –**



கத்தோலிக்க பெண் எழுத்தாளராக தனது ஆக்கத்திறனால் கவிதை, கட்டுரை, கதைகள் முலம் சமூக அவலங்களை சமய விழுமியங்களுடன் வெளிப்படுத்தும் ஒய்வு பெற்ற ஆசிரியர் மேரி நாயகி [நவாலியூர் நாயகி ] அவர்களுடன் ஒரு செவ்வி.

**செவ்வி கண்டவர் - யோகா**

**1. உங்கள் எழுத்துலக பிரவேசத்தின் அனுபவங்களைப் பகிர்வீர்களாக.?**

ஆம்: நிச்சயமாக. இது எனக்குக் கிடைத்த ஒரு பாக்கியம்.

**2. உங்களை எழுதத்தூண்டியவர்கள் எந்த வகையில் உங்களுக்கு துணையாக இருந்தார்கள்.?**

என்னை எழுதத்தூண்டியவர்கள் மனிதரல்ல. கடவுள்தான், ஏனென்றால் இயற்கையை ரசிப்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. கடற்கரை வயற்கரை இவைகள் எனக்கு பிடித்தமான இடங்கள். கடற்கரை மணலில் புதைந்து கிடக்கும் சிப்பிகள் சோகிகள் இவற்றின் அழகில் நான் சொக்கிப் போவேன். அந்த கிழிஞ்சல்களில் அழகிய படங்களை வரைந்தது கடவுள் தானே! எனவே "யார் அந்த கலைஞன்?" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை பாதுகாவலனுக்கு அனுப்பினேன். எனது 20 வது வயதில் நான் எழுதிய முதலாவது படைப்பு அதுவாகும். அடுத்து நான் மிகவும் நேசித்த ஒரு பிறவிக் குருடர். அவரைச் செல்லையா மாமா என்று எல்லோரும் அன்போடு அழைப்போம். அவரில் காணப்பட்ட ஆர்வத்திறமைகள் உ- ம் வயலின் வாசித்தல், நெசவு நெய்தல், நல்லிரவிலும் தோட்டத்துக்கு தண்ணீர் இறைத்தல் இவற்றைப் பகிரங்கப்படுத்தி "கடவுளின் கைவண்ணம்" என்ற தலைப்பில் அடுத்த கட்டுரை எழுதினேன். தொடர்ந்து சிறுகதைகளும் கவிதைகளும் எழுதினேன். அவை வாசகர்களின் பாராட்டை பெற்றதால் தொடர்ந்து பாதுகாவலனுக்கு கவிதைகள் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**3. உங்கள் படைப்புக்கள் எத்துறை சார்ந்தவை ?**

பெரும்பாலும் சீர்கேடுகள் நாட்டில் நடக்கும் வன்முறைகள் அநீதிகள் இவற்றை காணும் போதும் கேள்விப்படும்போதும் மிகுந்த உணர்சி வசப்பட்டு உடனே எழுதத்தொடங்கிவிடுவேன். உதாரணமாக "தாயல்லப் பேய்" "கடவுளைக் கை நீட்டி அடித்தேன்" "அப்பா நீ போய் விடு" போன்ற சிறுகதைகள் உணர்ச்சி வசப்பட்டு எழுதியவை.

**4. பெண் எழுத்தாளர்கள் அருகிவரும் காலத்தில் அவர்களைத் தூண்ட நீங்கள் கூறும் ஆலோசனைகள் யாவை?**

பெண்களுக்கு குடும்பப் பொறுப்பு அதிகமாதலால் எழுத்துத்துறையை அவர்கள் தேர்ந்தெடுப்பதில்லை இருந்தாலும் ஆர்வமுள்ளவர்கள் சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களை நிறைய வாசிப்பதன் மூலம் அவர்களிடம் ஆலோச்னைகள் பெறுவதன் மூலமும் எழுத்துத்துறையை வளர்க்கலாம். ஆனால் அவர்களுடைய குடும்பத்தவர்கள் தடைகற்களாக இருக்காமல் அவர்களை ஊக்கிவிக்க வேண்டும்.

(5ம் பக்கம் பார்க்க...)

# தார்சீசுக் கப்பலிலேறி...

**– அருட்பணி. இராசேந்திரம் ஸ்ரலின் –**

யோனாவின் வாழ்வுபோல்
நினிவேக்கு நீ அனுப்ப,
நானோ தர்சீசுக்குக் கப்பலேறத் துடித்தேன்.
என் வாழ்வுக் கப்பல் உடைந்து, பேரலையில் கலங்கித் திகைக்க,
பாதுகாப்பாய் எனை விழுங்கிக் கரையில் கக்கிய திமிங்கலம் நீ
கலக்கமும் திகிலும், களைப்பும் சோர்வும் கலைந்து எழுந்து
தலையை நிமிர்த்த.....
பசும் புற்றரையும் குளிர்ந்த ஓடையும் என் கண் முன்னே...
இதம் தருகின்றன
எனக்கென நீ விரும்பிய உன்னத கரையில்தான்
கக்கிவிட்டாய் என உணர்ந்து மகிழ்கின்றேன்.

நீ விரும்பும் நினிவேயைவிட்டு
நான் விரும்பும் தாசீசுக்குக் கப்பலேற முயற்சிப்பதுதான்
என் குழப்பங்களுக்கும் கவலைகளுக்கும் காரணமென்றறிந்தேன்
ஓட வேண்டும்போல வாழ்வின் ஏமாற்றங்கள்
உந்தித் தள்ளும்போது
உன்னோடு அதிகம் இருப்பேன்
உன் பாதை தெளிவாய் தெரியும்வரை.....
உன்னை விட்டு நான் இப்போ ஒடுவதில்லை.

அழகிய களங்களுக்கு மட்டும் என்னைச் சுமந்து செல்லும்
அன்புத் திமிங்கலமே!
உனக்கு நான் எப்படி நன்றி கூறி முடிக்க முடியும்!

# மோட்சபாதையெனும் ஞான சமுத்திரம்

ஞான இறைவனை ஆனமுறையினில்
பேண அறிவுறுத்தும் மோட்சபாதை
வேதத்திருமுறை ஓதத்தருமுறை
சொல்லித்தருவது மோட்சபாதை
கூச்சமின்றியே கூடிச் செபித்திட
மோட்சபாதை ஒரு ஞானசமுத்திரம்
கையில் இருக்கையில் கொடியநோய்களை
பைய விலக்கிடும் மோட்சபாதை
சாத்தான் வழியில் நித்தம் இருப்போரை
காத்து நிமித்திடும் மோட்சபாதை

பங்குகள் தோறுமே தங்கு தடையின்றி
பொங்கி நிறைகின்ற ஞான சமுத்திரம்
உள்ளத்திருக்கையில் உவகை நிறைந்திடும்
தெள்ளத் தெளிவான மோட்சபாதை
இறைவன் வழியினை
நிறைவின் நிலையினில்
கறைகள் நீக்கிடும் மோட்சபாதை
வீடுகள் தோறுமே வைத்திருப்போமே
பீடுகள் நீக்கிடும் மோட்சபாதையை




**பாலன்சேவியர், அல்லைப்பிட்டி - 3**

(யாழ் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில் மோட்சபாதை விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 400.)

# நெஞ்சில் மறையாத நிலவு

**கன்னியர் மணி லூசில்லா என்னும் அன்னையே!**



கண்ணை மூழக்கொண்டு ஒரு கணம் நினைக்கின்றோம் உங்களை!
ஆங்கிலக் கன்னியர் மடத்து வாசலில் நின்று நிழல் அளித்து வந்த ஆலமரம் வீழ்ந்து விட்டது.
ஆயிரம் ஆயிரம் பட்சிகளுக்கு அபயம் அளித்து அன்பும் ஆறுதலும் அளித்த ஆலமரம் அங்கே இல்லை. புன்னகைச் பூச்செண்டை நீட்டியவாறு பொன் பூச்சொரிந்த கன்னியர் திலகம் மறைந்து விட்டது.

மதமென்றும் குலமென்றும், இனமென்றும், உயர்வென்றும் துணிகடை வைத்து வியாபாரம் செய்த அந்நாட்களில் அனைத்து வாசல்களையும் மூழவிட்ட அதிபர் நீங்கள்.
அன்று நீங்கள் உதறிவிட்டமை இன்று காவியமாய் எங்கள் நெஞ்சில் கவிதை பாடுகிறது.
மணியோசை மங்கியதும் மேடையில் நின்று நீங்கள் விதைத்த தானியமணிகள் எங்கள் உள்ளத்தில் ஓங்கி வளர்ந்து உங்கள் பெயரை ஒலிபெருக்கியில் ஊதுகின்றன.

சேவை என்ற தேரினை சிரிப்போடு இழுத்துச் சென்ற சோழமன்னன் வாரிசு நீங்கள்.
போர் ஆபத்துக்களும் பஞ்சம் பட்டினியும், அன்னிய இராணுவ ஆதிக்கமும் சூழ்ந்து, சமூகத்தின் வேரையே ஆட்டி அசைத்த வேளையில் வீரப் பெண்ணாய் நின்று, மாணவ மணிகளை பாதுகாத்தவர் நீங்கள்.


ஏழை மாணவர்களின் வரண்ட தாவரங்களுக்கு நீர்ப் பாய்ச்சி, அவர்கள் உள்ளங்களில் குழயிருந்த பூங்கோதையம்மா நீங்கள்.
அற மார்க்கங்களையே ஆடையாக அணிந்து அற்புதமான பொற்குணம் படைத்த புண்ணிய சீலியம்மா நீங்கள்.
அறிஞர்களே வாயில் கை வைக்கும் ஆங்கில மொழித் தேர்ச்சி பெற்றிருந்தும், அகந்தை முளை கிழம்பாத பூச்செழயம்மா நீங்கள்.
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கதிகால்களை நட்டு, இளம் மங்கையர்களுக்கு, அதன் கனிகளை அளித்த துறவியம்மா நீங்கள்.
போக்குவரத்து சீர்குலைவு, துவக்குச்சூடுகள், ஆட்கள் கடத்துதல், சமையல் அடுப்புகளில் காளான் முளையெடுத்தல், அலையலையாய் பிறநாட்டுப் பயணம், எல்லா இல்லங்களிலும் மரணத்தின் நிழல், அழக்கழ வீடுகளில் மரணத்தின் ஓலம்,... இப்பழக் கொடுமையான காலப் பகுதியில், வித்தியாலயத்தின் சுக்கானை, திறமையோடும் மனித நேயத்தோடும், பிழத்த உங்களை பாராட்டுகின்றோம்.

எந்த மாணாக்கிக்கு என்ன திறமை உண்டோ அதனைக் கண்டறிந்து அந்த மாணாக்கியின் வளர்ச்சியில் கைகொடுத்து வழிநடாத்திய பெருமை மறக்கத்தக்கதன்று.
உங்கள் துறவற வாழ்க்கையே வழி காட்டும் தீபம். நீங்கள் ஆசித்த பேரின்ப உலகில் உங்களைப் போன்ற புண்ணிய சீலர்களோடு வாழவேண்டுமென வேண்டுகிறோம்.

– அமுது –

# வேத சாட்சிகளின் இரத்தம் சிந்தப்பட்ட இடம்

உரோமையில் கொலோசியம் என்னும் வட்ட வடிவமான விளையாட்டு அரங்கம் ஒன்று சிதைந்த நிலையில் இன்று காட்சியளிக்கின்றது. இதன் நடுவேயுள்ள மண் செந்நிறமாகக் கிடக்கிறது அந்தக் காலத்தில் கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டது அங்குதான். கொடிய விலங்குகளுக்கு இரையாக போடப்பட்டு கீழித்தெறியப்பட்டு மரித்ததும் இங்குதான். இக்காட்சியைப் பல இரக்கமற்ற மனிதர்கள் மேலே அரங்க மேடைகளில் அமர்ந்தபடி பார்த்து இரசித்தனர். இன்று இவ்விடத்தில் ஒரு சிலுவை நாட்டப்பட்டுள்ளது. கொலோசியத்தைப் பார்க்கச்



செல்லும் பயணிகள் எங்கள் விசுவாசத்துக்குச் சான்று பகர்ந்த இடம் என்று அவ்விடத்தை முத்தமிடுகின்றனர்.

**பியோ**
**புனித யாகப்பர் ஆலயம் குருநகர்**

# தற்கொலை செய்வோருக்கு மரணச் சடங்குகள் செய்யலாமா? திருப்பலி ஒப்புக்கொடுக்கலாமா?

**கேள்வி : செபமாலைக் கன்னியர், யாழ்ப்பாணம்.**

**ஆசிரியர் பதில் :** இக்கேள்விக்கு பதில் அளிப்பதற்கு முன் ஒரு முக்கியமான விடயத்தை நாம் உணரவேண்டும். இறைவன் நமக்கு அளித்த உயிர் உன்னதமானது. அதற்கு உரியவர் அல்லது சொந்தக்காரர் இறைவனே. எனவே இறைவன் எமக்கு அளித்த உயிர் என்னும் கொடையை நன்றியோடு பேணிப்பாதுகாத்து அதன் ஈடேற்றத்திற்காக உழைப்பது எமது கடமையாகும். யாருக்குமே உயிரை அழித்துக் கொள்ளும் உரிமை கிடையாது.

இப்பொழுது உங்கள் கேள்விக்கு வருவோம். இப்படியான ஒரு கேள்வி எழுவதற்குக் காரணம் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் அண்மைக் காலம்வரை தற்கொலை செய்வோருக்கு திருச்சபையில் மரணச் சடங்குகளோ திருப்பலியோ மறுக்கப்படுவதற்கான நேரடியான ஒரு சட்டம் இருந்தது தான் என்று கூறலாம்.

கத்தோலிக்க திருச்சபை தனது விசுவாச முதிர்ச்சிக்கமைய காலத்திற்குக் காலம் தனது சட்டங்களை மறுசீரமைத்து வருவது வழக்கமாகும். இதன்படி 1917 ஆம் ஆண்டில் திருச்சபை அறிவித்த சட்டக் கோவைக்கும் 1983ம் ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டக்கோவைக்குமிடையே இவ்வடிப்படையிலான பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை நாம் காண முடியும்.

உங்கள் கேள்வி மரணச் சடங்குகள் பற்றியதால் மரணச் சடங்குகளும் அடக்கச் சடங்குத் திருப்பலிகளும் யாருக்கும் மறுக்கப்படலாம் என்று 1917ம் ஆண்டு சட்டக்கோவையிலும் 1983ம் ஆண்டு சட்டக்கோவையிலும் என்ன கூறப்படுகிறது என்பதை முதலில் அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

**1917ம்ஆண்டு திருச்சபைச் சட்டக்கோவை: சட்டம்1240**

பின்வருவோருக்கு அவர்கள் மரண வேளையின்முன் மனமாற்றத்திற்கான அறிகுறிகள் காட்டவில்லையென்றால் திருச்சபையில் மரணச் சடங்குகள் மறுக்கப்படும்

1. பகிரங்கமாக விசுவாசத்தை மறுதலிப்பவர், திரிபுக்கொள்கையாளர், சமயப்பிளவை உருவாக்குபவர், வேறு சபைகளைச் சார்ந்தவர்கள்.

2. திருச்சபையில் இருந்து நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வெளியேற்றப்பட்டோர்.

3. **தம்மைத் தாமே அழித்துக் கொள்வோர் (தற்கொலை செய்வோர்)**

4. இன்னொருவரோடு சண்டை செய்து இறப்பவர் அல்லது அதனால் ஏற்பட்ட காயத்தால் இறப்பவர்.

5. தங்களுடைய உடலை அடக்கம் செய்யாமல் எரிக்க வேண்டும் என்று முன்கூட்டியே கூறியிருப்பவர்.

6. பகிரங்கமான பாவிகள்.

மேற்படி 1917ம் ஆண்டின் திருச்சபைச் சட்டத்தில் மரணச் சடங்கு மறுக்கப்படுவோரை ஆறு வகைகளில் இனங்காட்டிய சட்டம் 1983ம் ஆண்டின் திருச்சபைச் சட்டக் கோவையில் பின்வரும் மூன்று வகையினரை மட்டும் கூறி நிற்கின்றது.

**1983ம் ஆண்டின் சட்டக்கோவை : சட்டம் 1184**

இறப்பதற்குமுன் மனமாற்றத்திற்கான சில அடையாளங்களைக் காட்டியிருந்தாலன்றி கீழ்க்கண்டவர்களுக்குத் திருச்சபை அடக்கச் சடங்குகளை மறுக்க வேண்டும்.

1. பகிரங்கமாக விசுவாசத்தை மறுதலிப்பவர், திரிபுக்கொள்கையாளர், சமயப்பிளவை உருவாக்குபவர்.

2. கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான காரணங்களுக்காக உடல் எரித்தலை தெரிவு செய்து கொண்டவர்கள்.

3. விசுவாசிகளுக்கு பகிரங்க இடறலின்றி திருச்சபை அடக்கச் சடங்கு அளிக்க முடியாத மற்றப் பகிரங்கமான பாவிகள்.

இதே சட்டத்தின் இரண்டாம் பகுதி பின்வருமாறு கூறுகின்றது.

ஏதாவது ஐயப்பாடு எழுந்தால், தலத்திருச்சபை ஆளுனர் (Local Bishop) கலந்தாலோசிக்கப்பட்டு அவருடைய தீர்ப்பைப் பின்பற்ற வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவைகளின் அடிப்படையில் தற்போது நடைமுறையிலுள்ள திருச்சபைச் சட்டக்கோவை (1983ம் ஆண்டு வெளியிடப்பட்டது) தற்கொலை செய்வோரைப்பற்றி நேரடியாக எதுவும் கூறவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இச்சட்டங்களை இயற்றியபோது திருச்சபை பின்வரும் விசுவாசக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது.

1. திருச்சபையின் அடக்கச் சடங்குகளினதும், அடக்கத் திருப்பலிகளினதும் முதலாவது நோக்கம் இறந்தவருடைய ஆன்மாவுக்காக செபிப்பதாகும்.

2. எல்லா வழிபாடுகளும் (அடக்கச் சடங்கு உட்பட) முழுத் திருச்சபையின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகளேயொழிய, யாருடைய தனிப்பட்ட சொத்தும் அல்ல. ஆகவே, திருச்சபையின் ஐக்கியத்துக்கு களங்கம் விளைவிப்போரைத் தவிர வழிபாடுகள் எல்லாருக்கும் உரியவை.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போதும் தற்போதைய திருச்சபைச்சட்டம் குறிப்பிட்டுக் கூறும் மூன்று வகையாரும்கூட மரணத்தின் முன்னதாக மனமாற்றத்திற்கான அடையாளங்களைக் காட்டினால் அவர்களுக்குக் கூட மரணச் சடங்கு மறுக்கப்பட முடியாது.

1917ம் ஆண்டு சட்டத்தில் ஒருவர் தனது உடலை அடக்கஞ் செய்யாமல் எரிக்கவேண்டுமென்று கூறியிருந்தால் அவருக்கு மரணச் சடங்கும், திருப்பலியும் மறுக்கப்படும் என்று கூறியிருக்க, தற்போதைய சட்டம் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான காரணங்களுக்காக இப்படிச் சொல்வோருக்கு மட்டும் தான் இவை மறுக்கப்படவேண்டும் என்று கூறுகிறது. இதனடிப்படையில் முடிவில்லா வாழ்விலும், உடலின் உயிர்த்தெழுதலும் விசுவாசம் கொள்ளும் ஒருவர் தனது உடலை எரிக்கும்படி கூறுவாரானால் அவருக்கு மரணச்சடங்கும், திருப்பலியும் மறுக்கப்பட முடியாது. (இன்று கத்தோலிக்கர் பலருடைய உடலை எரிக்கும் வழக்கும் மேல் நாடுகளில் மட்டுமல்ல, எமது நாட்டிலும் உண்டு)

**தற்கொலை சாவான் பாவமா?**

தற்கொலையைப் பொறுத்த மட்டில், தற்கொலை செய்பவர் எப்பயான மனநிலையில் இறக்கிறார் என்பது இறைவனைத் தவிர யாருக்கும் தெரியாத விடயம். அநேகமான தற்கொலைகள் தனிமையில் யாருமில்லாத வேளையில் தான் நடைபெறுகின்றன.

இதுதவிர தற்கொலை ஒரு சாவான பாவம் என்று கருதினால் கூட, ஒரு சாவான பாவத்துக்குரிய மூன்று நிபந்தனைகளும் ஒரு தற்கொலையில் உள்ளதா என்பதையும் ஆராயவேண்டும்.

**ஒரு பாவம் சாவான பாவம் என்பதற்கான மூன்று நிபந்தனைகள்.**

1. கனமான காரியம் (Serious Matter)
2. பூரண சம்மதம் (Full Consent)
3. பூரண அறிவு (Full Knowledge)

மேற்படி நிபந்தனைகளில் முதலிரு நிலைகளும் ஒரு தற்கொலையில் இருந்தாலும், ஒருவர் பூரண அறிவு இருந்தால் தற்கொலை செய்வாரா என்ற கேள்வி பலராலும் கேட்கப்படும் ஒரு கேள்வியாகும்.



கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி என்னும் கையேடு தற்கொலை பற்றி பேசும்போது, ஆழ்ந்த உளவியல் பாதிப்பு, பெரும் கஷ்ரங்களை எதிர்கொள்ள வேண்டும் என்ற ஆதங்கம், பெருந்துன்பங்களை, சித்திரவதைகளை எதிர்கொள்ள முடியாத நிலை ஆகியவற்றினால் ஒருவருடைய முழு சுதந்திரம் பாதிக்கப்படுகிறது என்று கூறுகிறது. (CCC 1735)

மொத்தத்தில் தற்கொலை செய்யும் ஒருவரை விசுவாசத்தை மறுதலித்தாரென்றோ, பகிரங்கப் பாவியென்றோ, சாவான பாவத்தோடு இறந்தார் என்றோ தீர்ப்பிட முடியாத நிலையில் அவருடைய ஈடேற்றத்துக்காக மரணச்சடங்கு, திருப்பலி நிறைவேற்றி செபிப்பதில் தடையில்லை என்பதை திருச்சபையின் போதனையின் அடிப்படையில் கண்டுகொள்கிறோம்.

ஆயினும், ஒருவர், அவர் எப்படியாக இறந்தாலும் அவருக்கு மரணச சடங்கு, திருப்பலி கொடுப்பதா, கூடாதா என்ற சந்தேகம் ஏற்படுமிடத்து தலத் திருச்சபையின் ஆளுனராகிய ஆயரோடு கலந்தாலோசித்து முடிவெடுக்குமாறு திருச்சபைச் சட்டக் கோவை கூறுவதை நாம் மறந்துவிடக்கூடாது.

அத்துடன் திருச்சபையின் எந்தவொரு செயற்பாடும் மக்களுடைய விசுவாசத்திற்கு இடறலாய் இருக்குமென்றால் (அது திருச்சபைச் சட்டப்படி சரியான செயற்பாடாக இருந்தாலும் கூட) அது தவிர்க்கப் படவேண்டும் என்ற திருச்சபையின் பொதுவான நிலைப்பாட்டையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இங்கு நாம் மீண்டும் வலியுறுத்துவது தற்கொலை செய்வது இறைவன் எம்மீது கொண்டுள்ள அன்புக்கு எதிரான ஒரு செயலாகும்.

# துன்பப்படும் மக்களுக்கு ஆண்டவர் கூறுவது நம்பிக்கையாயிரு மகனே! என் மகளே!

**அருட்சகோ. றமேஸ் அ.ம.தி**

தம்மேல் முழு நம்பிக்கை கொண்ட மக்களை இறைவன் ஒரு போதும் கைவிட்டதில்லை என்பதை திருவிவிலியம் பல நிகழ்ச்சிகள் மூலமாக எண்பித்து நிற்கிறது. தொடக்க நூலிலே பிதாப்பிதாவாக வருகின்ற ஆபிரகாம் இறைவனின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு நிபந்தனை எதுவுமின்றி அதனை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப தன் வாழ்வை அமைத்துக் கொண்டதன் மூலமாக விசுவாசத்தின் தந்தை என்கின்ற பெரும் பேற்றினைப் பெற்றுக் கொண்டார்.

நோவாவும் மோயீசனும் வாழ்ந்த விசுவாச வாழ்வு புனித பவுலினால் புகழ்ந்து பேசப்படுகிறது (எபி. 11). யோபு என்கின்ற நீதிமான் பெரும் துன்பங்களையெல்லாம் அனுபவித்து, தனக்குரிய யாவற்றையும் இழந்த போதிலும் இறை நம்பிக்கையை இழந்துவிடாததால் கடவுள் அவருக்கு நூறு மடங்கு சம்பாவனை அளித்தார் என்பதைனை யோபுவின் ஆகமத்தில் காண முடிகிறது.

சிங்கக் குகையில் இருந்து தானியேலும், தானியேலின் மூலமாக சூசன்னா என்ற தூயவளும் காப்பாற்றப்பட்டது இறைவனில் அவர்கள் கொண்ட நம்பிக்கையால் தான். இயேசுவின் காலத்தில் அவர் புதுமைகள் புரிவதற்கு முன்னர் யார் யார் அப்புதுமைகளால் பயன் பெற இருக்கிறார்களோ அவர்களிடம் நம்பிக்கை இருககிறதா என சோதித்துப் பார்ப்பது வழக்கமாக இருந்தது. "நம்பிக்கையாயிரு மகனே" "நம்பிக்கையாயிரு மகளே" எனும் வார்த்தை நற்செய்தி ஏட்டில் நிறைந்திருப்பதை காண முடியும். இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட அனைவருமே மீட்பைப் பெற்றுக் கொண்டார்கள்.

இன்று குறிப்பாக எமது நாட்டில் வாழுகின்ற, எமது தமிழ் உறவுகளுடன் சேர்ந்து நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எப்போது முடிவு வரும்? என்பதே எங்கள் எல்லோரினதும் பெரும் ஆதங்கமும் மன்றாட்டமுமாக இருக்கிறது. நாளுக்கு நாள் பறிக்கப்படும் எமது உறவுகளின் உயிர்கள் திரும்பி வருமா? அவையங்களை இழந்து மனித உருக்குலைந்து தத்தளிக்கும் உள்ளங்களுக்கு நிம்மதி கிடைக்குமா? கொடுரங்களுக்கு மத்தியில் துன்பப் படும் இளம் பிஞ்சுகளின் மனப் புண்கள் ஆறுமா? பெற்றோரை, பிள்ளைகளை, உறவுகளை பிரிந்து அநாதைகளாக அந்தரிக்கும் மனிதர்கள் திரும்பவும் ஒன்று சேர முடியுமா? சொத்துக்களையும், சொந்தங்களையும், சொந்த ஊரையும் இழந்து வாழும் அகதி வாழ்வு முடிவுக்கு வருமா? என்ற ஓர் நம்பிக்கையற்ற கனவுகளைச் சுமந்து வாழ்வில் விரக்தியடைந்து சாவை நோக்கி வாழுகின்ற எங்களுக்கு நம்பிக்கையூட்டும் செய்தி என்று நாம் எதைக் கேட்க முடியும்?

இவ்வாறு எம் மனக்குமுறல்கள் நீண்டு சென்றாலும் எல்லாவற்றிற்கும் ஓர் முடிவைக் காட்டி எமக்கு வாழ்வளிக்கக் கூடியவர் ஒருவர் இருக்கிறார். அவர்தாம் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து. அவரே எமது நம்பிக்கை. இறைவன் அன்று வாழ்ந்த மனிதனுக்கு காலத்துக்கு காலம் பல நிகழ்வுகள் மூலமாக விடுதலை வாழ்வைப் பெற்றுக் கொடுத்து ஆசிர் அளித்தது போல, எமது துன்பம் நிறைந்த வாழ்வையும் இன்பமாக மாற்றுவார். பல குழப்பங்களுக்கு மத்தியிலும் நிரந்தரமான அமைதியை இயேசுக் கிறிஸ்து வழியாகத் தருவார் என்ற நம்பிக்கையை எங்களில் ஏற்படுத்திக் கொள்ளுவோம். தாங்க முடியாத துன்பங்களும், இழப்புக்களும் எம்மைச் சூழ்ந்தாலும் "நம்பிக்கையாயிரு மகனே" "நம்பிக்கையாயிரு மகளே" என்ற நம் ஆண்டவர் இயேசுவின் குரலொலிக்கு செவி மடுப்போம்.

எனவே "பற்றுக பற்றற்றான் பற்றினை ..." என்ற கூற்றுக்கிணங்க "ஆணடவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம் நான் யாருக்கு நடுங்கவேண்டும் (தி.பா. 26:1) என மன்றாடி மனத்தைரியமடைவோம். ஆண்டவரே என் கற்பாறை, என் அரண், என் மீட்பர், என் இறைவனாய் உள்ளவரே, நான் அடைக்கலம் புகுவதற்கு ஏற்ற கோட்டையாக உள்ளவரே என் கேடயமும், எனக்கு மீட்பளிக்கும் வலிமையும் என் அடைக்கலமுமாக உள்ளவரே" (தி.பா. 17:2) என நம்பிக்கையோடு வேண்டுவோம். ஆகையால் "மக்களே சகல மனிதரையும் பாருங்கள், ஆண்டவரை நம்பின எவனும் கலங்கினதில்லையென்று கண்டறியுங்கள் (சீரா.2:11). நம்பிக்கையாயிரு மகனே!" என் மகளே!

## சமூக ஒற்றுமை, சமயப் புரிந்துணர்வு, நல்லிணக்கம் போன்றவற்றை வளர்த்தெடுத்த "தொண்டன்"

**தொண்டன் சஞ்சிகையின் 40வது ஆண்டு நிறைவில் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**

திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு நிலையத்தினரால் வெளியிடப்படும் தொண்டன் சஞ்சிகையானது தனது 40வது ஆண்டு நிறைவை இவ்வாண்டு கொண்டாடுகின்றது. பல்வேறு தடைகள் பிரச்சனைகளுக்கெல்லாம் முகம் கொடுத்து சாதனை புரிந்திருக்கும் இச்சஞ்சிகையின் பணியினை பாராட்டி ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் தற்போதைய ஆசிரியராக அருட்தந்தை. றொஹான் பேனார்ட் அடிகள் பணியாற்றுகின்றார்.

பாதுகாவலன் சார்பில் தொண்டனை வாழ்த்துகிறோம்.

## ஆன்மீக படைப்புக்களை அளிப்பவர்கள்...

**5. உங்கள் இலக்கிய படைப்புக்களை தொகுப்பாக வெளியிட்டுள்ளீர்களா?**

இல்லை . அந்த எண்ணமும் எனக்கில்லை. எனது படைப்புகளுக்கு வாசகர்கள் தரும்பாராட்டு குறிப்பாக எமது நவாலியூர்ப் பங்கு மக்களின் அமோக ஆதரவு எனக்கு மிகுந்த மனத்திருப்தி அளிக்கிறது. அதுவே போதும்!

**6. உங்கள் படைப்புக்களில் மனங்கவர்ந்த படைப்பாக எதைக் கூறுவீர்கள்.?**

அண்மையில் பாதுகாவலனுக்கு நான் எழுதிய "வாளை உறையில் போடு" என்னும் கவிதை காலத்துக்கேற்றதும் என்னைக் கவர்ந்ததும் ஆகும்.

**7. உங்கள் அனுபவத்தில் ஆன்மீகப் பங்களிப்பை படைப்பாளிகள் எந்த வகையில் வளர்க்கலாம்?**

ஆன்மீகத்தை பொறுத்த வரையில் அத்தகைய படைப்புக்கள் சாதாரணமானவர்களால் எழுதுவது கஷ்டம். ஆன்மீகத் துறையில் மிகுந்த அறிவு தேவை. வேதாகமத்தைக் கசடறக்கற்றவர்கள் புனிதர்களின் வாழ்க்கைச் சரிதங்களை நன்கு வாசித்தறிந்தவர்கள் இத்தகைய படைப்புக்களை எழுத முன்வந்து வளர்க்க முடியும்.

# குடும்பம் ஒரு கதம்பம்

## திருமணமும் குடும்பமும்

### கட்டிடம் பலமாக இருக்க உறுதியான அத்திவாரம் தேவை

எஸ் - ஜே- யோகராசா, சிரேஷ்ட விரிவுரையாளர், (உளநல ஆலோசகர்) களனிப்பல்கலைக்கழகம்

( அங்கம் 08 )

" நீங்கள் கடவுளின் ஆலயம் என்பதும் கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கிறார் என்பதும் உங்களுக்கு தெரியாதா? கடவுளின் ஆலயத்தை எவனாவது அழித்தால் அவனைக் கடவுள் அழித்துவிடுவார். ஏனெனில் **கடவுளின் ஆலயம் பரிசுத்தமானது. நீங்களே அவ்வாலயம்.**" (1 கொரி 3 :16 - 17)

"ஏற்கனவே அடித்தளம் இட்டாயிற்று இவ்வடித்தளம் இயேசுக் கிறிஸ்துவே. வேறு அடித்தளத்தை எவனும் இடக்கூடாது" (1கொரி 3:11 )

கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தின் அடித்தளம் அத்திவாரம் இயேசுக் கிறிஸ்துவே. எமது விசுவாசத்தில் அத்திவாரமாக வேறு எவரையும் வேறு எதையும் போடக் கூடாது என்பது இதில் புரிகிறது.

திருமண வாழ்வின் அத்திவாரத்திற்கு உறுதியூட்ட நேரத்தையும் முயற்சியையும் அர்ப்பணிக்க மனமுள்ளவராக இருக்க வேண்டும். அப்போது வாழ்வில் சந்தோசம் மலரும். இன்று பணம் சேர்க்கவும் பொருட்கள் புகழ் சேர்க்கவுமே அதிகமான நேரத்தை ஒதுக்குகிறோம். ஆனால் இருவரும் சேர்ந்து மனம் விட்டு கதைக்க தமது உணர்வுகளை கலந்துரையாட நேரம் ஒதுக்குதுவதில்லை.

இயேசுநாதர் திருச்சபையை கட்ட தமது சீடர்களோடு அன்போடு நடந்து கொண்டார். கிறிஸ்து நாதருக்கும் திருச்சபைக்கும் இடையில் இருந்த உறவு நெருக்கம் கணவன் மனைவிக்கிடையில் இருக்க வேண்டும்.

" கிறிஸ்து என்னும் ஒரே மணவாளற்கு உங்களை மண ஒப்பந்தத்தில் பிணைந்துள்ளேன்." (2 கொரி 11:2 )

யேசுநாதர் தமது சீடர்களோடு உண்மைத் தன்மையோடு நடந்து கொண்டார்.

" இறுதிவரை அவர்கள் மேல் அன்புக்கூரலானார்" (யோவான் 13:1 )

தன்னைப் பின்பற்றுபவர்களுடைய பெலவீனங்களையும் குறைபாடுகளையும் கருணையோடு சகித்தார். தம்பதிகள் ஒருவர் ஒருவரை அவ்வாறு இறுதிவரை அன்பு செய்ய வேண்டும். குறைகளோடும் நிறைவுகளோடும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். மன்னித்து மறக்க முயல வேண்டும்.

யேசுநாதர் ஒருபோதும் அவர்களுடைய சக்திக்கு மீறிய எதையும் எதிர்பார்க்கவில்லை.

" நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவை இன்னும் பல உண்டு; ஆனால் அவற்றை இப்பொழுதும் உங்களால் தாங்க முடியாது." (யோவான் 16:12)

அதே போன்று இருவரும் செயற்பட முன்வர வேண்டும் இல்லையேல் வேதனை எதிர்பார்ப்பு தோல்வி ஏற்படும்.

நெருங்கிய நண்பர்கள் தமது மனதை நோகடித்தும் கூட இயேசுநாதர் மிக மென்மையாக நடந்து கொண்டார். கோபப்பட்டு அவர்களை திட்டாமல் கடவுளின் அன்பையும் மனத்தாழ்வையும் இரக்கத்தையும் காண்பித்து அவர்களை சரி செய்ய முயற்சித்தார். " சுமைசுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம் என் நுகம் இனிது என் சுமை எளிது" (மத் 11 : 28 - 30)

கணவன் மனைவி ஒருவர் ஒருவரை மனம் நோகச் செய்தாலும் கோபப்பட்டு திட்டாமல் தாங்கிக் கொண்டு அன்பை காட்ட வேண்டும்.

"கணவர்களும் தம் மனைவியரை தம் சொந்த உடலெனக் கருதி அவர்களுக்கு அன்பு செய்ய வேண்டும். மனைவிக்கு அன்பு காட்டுபவன் தனக்கே அன்பு காட்டுகிறான்." ( எபேசி 5 : 28 )


திருமணத்தின் பின் எனது பணம் எனது சொத்து என்பதை விட்டு எமது பணம் எமது சொத்து என்று செயற்பட வேண்டும். அந்த நிலையில் ஒருவர் மற்றவர்க்கு பாதுகாப்பு உணர்வையும் நம்பிக்கையையும் அன்பையும் காட்ட வேண்டும்.

கணவன் மனைவி பிரமாணிக்கமாகவும் விசுவாசமாகவும் இல்லாமல் தம்து பெற்றோர் சகோதரருக்கே முதலிடம் கொடுத்தால் அங்கே நம்பிக்கை விசுவாசம் வளராது. திருமணத்தில் இருவரது உறவே முக்கியம். திருமண வாழ்வில் பல பிரச்சினைகள் வந்து புயல் வீசக் கூடும். அதை வெற்றிகரமாக சமாளித்து பழக வேண்டும் . அப்போது உங்களை ஞானமுள்ளவர்களாக ஆக்குவார்.

ஞானத்தைக் கண்டு பிடித்து விவேகத்தால் நிறைந்திருக்கும் மனிதனே பேறு பெற்றவன் (பழ மொழி ஆகமம்/நீதிமொழி 3:13)

ஒருகட்டிடம் நீண்டகாலம் நிலைத்திருக்க அதை அவ்வப்போதே பராமரிக்க வேண்டும். இருவரும் தமது இலட்சியங்களை அடைய ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி மரியாதையுடன் நடத்தினால் திருமணப்பந்தம் பலப்பாக இருக்கும். அப்போது சுயநலம் வேர் விடாது. கோபமும் கட்டுப்பாட்டுக்குள இருக்கும்.

தொடரும்...



மெக்சிக்கோவில் நடைபெற்ற உலக குடும்ப தினத்தில் தயாரிக்கப்பட்ட திருத்தந்தையின் உருவத்தில் இடம்பிடித்த எமது யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்கள்.

# கவிதைச் சரம்

## புதிய பிரபஞ்சம்

இப்பூமி
காலக் கருவறையின்
தத்தெடுப்பு
குருதித் தண்ணீரின்
வளர்த்தெடுப்பு
துப்பாக்கி துளைகளின்
துளைத் தெடுப்பு
விண்வெளித் தூததின்
எல்லை விரிப்பு

சந்தோசக் கண்ணீரோ!
சபலக் கண்ணீரோ?
எதுவாய் இருந்தாலும்
இன்று
புதிதாய் பிறந்த
பிரபஞ்சத்தை
மடியில் ஏந்தி
மலர் தூவுங்கள்

**செ. மோகன்ராஜ்**
**நெடுந்தீவு - 12**

## இயேசுவைப் போல் நானும்...

கிறிஸ்துவை நான் ஏற்றுக்கொண்டு
கிறிஸ்து அவனாய் வாழ நினைத்தால்
கிறிஸ்துவாய் நான் மாற வேண்டும்
கிறிஸ்து அவனாய் சாக வேண்டும்

இறைவனின் குரலை செவிதனில் ஏற்று
என்னை முழுதாய் கொடுக்க வேண்டும்
அழைத்தலை உணர்ந்து சாட்சியாய் வாழ்ந்து
இறைவனின் அரசை பரப்பிட வேண்டும்

வாழ்வில் சுமைகள், சிலுவைகள் வந்தால்
தோள் தனைக் கொடுத்து சுமக்க வேண்டும்
அடுத்தவன் சுமைகள் பெரிதெனக் கண்டால்
அவனுக்கும் ஒரு கரம் கொடுக்க வேண்டும்
இறைவன் தந்த ஆற்றல் கொடைகளை
மற்றவர் பயன்பெற பகிர்ந்திட வேண்டும்
எனக்கு எதிராய் செயற்படும் மனிதரை
எளிய மனத்துடன் மன்னிக்க வேண்டும்

அயலவன் உருவில் யேசுவைக் கண்டு
அபயம் கொடுத்து காத்திட வேண்டும்
யேசுவின் பண்புகள் என்னில் கலந்து
யேசுவாய் நான் வாழ வேண்டும்.

**இ. அ. அமலரட்ணம்**
**பேராலயம்.**

## நிஷாவுக்கு...

நிஷா..............நீ
வந்து போனதாவது
உனக்கு ஞாபகம்
இருக்கிறதா.............?

பூக்கள் என்று......... உன்னை
வரவேற்ற போதே !
பூகம்பமாகிக்...............
கலவரம் செய்தாயே!

காயப்படுத்தி விட்டு போனவளே....
உன்னை நினைக்கும்
போதெல்லாம் ஆன்மா கூட.....
அழுது கொள்கிறது!
எத்தனையோ வேதனைகளைக்
கடந்த போதிலும்............

உன்னை மாதிரி ஒருத்தியும்
வருத்தியதில்லை..........

இரக்கம் இல்லாத........
தேவதையே!
உன்னால் உறக்கமே
எதிரியாகி விட்டது

நிஷா.......... இனியும் நீ
வந்து போகாதே!
வலிகளோடாவது........
வாழ விடு

**வீ. முகிலன்**
**நெடுந்தீவு-13**

## தருவாயோ நல்ல தீர்ப்பு

பரமன் இயேசு படைத்த பாருலகை
பார்க்க பரவசத்துடன் பத்துமாதம்
பங்குவமாய் காத்திருந்து வந்தேன்
வந்தவுடன் தான் நினைத்தேன் ஏன் வந்தேன்
பாளாய் போன உலகை பார்க்கவா என்று

எங்கு பார்த்தாலும் அழுகையின் ஓசை
ஒருவரில் கூட அமைதியில்லையே
அங்கலாய்ப்புடன் அடுத்தவனை
அணைப்பதா அழிப்பதா என்ற விவாதம்
வேண்டாம் வேண்டாம் வீணாய் போன உலகம்

விடுதலை தேடி அலையும் உலகில்
விடுகதையாகத்தான் இருக்குது எம்வாழ்வு
விரக்தியின் விழிம்பில் விடியுது தினமும் நாள்
இன்னது செய்வேன் என்று நினைத்தேன்
ஆனால் என்னவோ நடக்குது புரியவில்லை

வாழ்வென்றால் வசந்தம் வரணும்
உறவுகளுடன் கூடி குதூகலிக்கணும்
ஆனால் உறவுகள் உதிரம் சிந்துகையில்
உண்மையின் மகிழ்ச்சியை புதைத்துவிட்டேன்
வேதனை நிறைந்த வாழ்வு இனியும் வேண்டாம்

நல்லதீர்ப்பு கிடைக்குமென்று காத்திருந்தேன்
கடையில் கிடைத்தது கடுமையின் தீர்ப்பு
இறைவா உன்னையே நம்பினேனையா
நல்ல தீர்ப்பு தருவாயோ? ஏங்கிநிற்கும்
எமக்கு வசந்தம் தருவாயோ வள்ளலே!

**H.B. டியூலா,**
**கொய்யாத்தோட்டம்**

## ஒற்றுமையாய் வாழ்வோம்

பல ஆண்டுகள் சென்றாலும்
ஓய்வதில்லை இந்த - போர்
பெற்றோரை இழந்து
உறவினரை இழந்து
ஏங்குகிறது எம்முள்ளம்
அகதி முகாம்களில் அனாதையாக
நாம் இருக்கிறோம்
உங்கள் பாதகச் செயல்களை
ஓரங்கட்டி வைத்துவிட்டு
ஜாதி மத மொழி இன பேதமின்றி
ஒற்றுமையாய் வாழ்வோம்

**ப. யூலியன்**
**ஜேம்குறுக்குத்தெரு, (கதிற்றல்வீதி)**
**யாழ்ப்பாணம்.**

## யுத்த முனையில் 2009

அன்று வந்தது சுனாமி
இன்று வந்தது நிஷா
இனி வருவது என்ன?
கள முனையில் காத்திருக்கும் ஆயுதங்கள்
சுடுகின்ற வெய்யிலிலும்
சுழல்கின்ற காற்றினிலும்
சுதந்திரம் இல்லையே எமக்கு - எப்போ
சுதந்திர காற்றை சுவாசிக்கப்போகிறோம்

புத்தாண்டில் புத்தொழி பிறக்காதா - என்று
எத்தனை உள்ளங்கள் காத்திருந்தன
அது கனவாக மாறி இன்று
கதறி அழும் நிலை வந்து விட்டதே

இனி விடிவு வருமா???
காத்திருந்து என்ன பலன்
சொத்து இழந்து சொந்தம் இழந்து
தனிமரமாக மாற்றுகிறது 2009

**M. ஜெயராட், நெடுந்தீவு**

## இளமை

இளைஞனே புறப்படு
இறை அரசை பரப்பிட
இளமையான உன் நாட்களை
இறை புகழ் பாடு உன் நாவால்
இளமை இனிமையானது
மனித வாழ்விலே

வாலிப வாழ்க்கையை வீணாக்காதே
போனால் திரும்பாது வாலிபமே
உன் வாலிப வாழ்க்கையெல்லாம்
உன் யேசுவை போற்றிடு
உலகின் கடை எல்லைவரை- நீ
பரப்பிடு நற்செய்தியை

**இ. நவீந்திரன், மாகியப்பிட்டி.**

## அன்னையும் நாமும்

இவ்வுலகின் மீட்புக்காய் தம்முயிரை ஈந்திட்ட
உத்தமனாம் யேசுவின் உத்தமித்தாய்தான் மரியா - இந்த
உத்தமி உள்ளத்தின் அன்பு
ஊற்றுக்கள் இவ்வுலகோர் நாம் - அந்த
உத்தமி தந்த அன்பு ஊற்றை
அருகிருக்கும் அன்பனுக்குள்ளும் பாய்ச்சி
அன்னையின் அன்பு பிள்ளைகளாய் - என்றும்
அன்புடனும் பண்புடனும் அவள் அரவணைப்பில்
ஒற்றுமையாய் வாழ்வோம்

**சீ. அ. சயந்தன்,**
**புனித மாட்டீனார் குருமடம்**

## தொடருமோ நகர்வலம்...!

முன்நகர் பின்நகர்வு
செய்யுது இரு தரப்பு
அதனால்
முகாம் நகர்வு தெரு நகர்வு
பிழைப்பென்று
செய்யுது மக்கள் தரப்பு

**யூ. யுஸ்லின்**
**(2ம் வட்டாரம், அல்லைப்பிட்டி.)**

## தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தின்போது வெளிவந்த கருத்துக்கள்

எமது மக்கள் துன்புறும்போது அவர்களைக் காப்பாற்ற எம்மால் எதுவுமே செய்ய முடியாத நிலையில், மனிதனால் இயலாதது இறைவனால் இயலும் என்ற நம்பிக்கையில்தான் நாம் இங்கு செப, தபத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

கொடியவனின் கொடிய செயல்களைவிட, நல்லவர்களின் அமைதி அதிக அழிவை ஏற்படுத்தும் என்று டிறிச் பொன்கெபர் என்ற அறிஞர் கூறியதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தென் இந்திய திருச்சபை முன்னாள் ஆயர் எஸ். ஜெபநேசன்.

எமது உறவுகள் செத்து மடிகின்றபோது நாம் எதுவுமே செய்யாமல் இருப்பது மனச்சாட்சிக்கு விரோதமானது. இப்படியான அமைதியான வன்முறையற்ற போராட்டங்களை நாம் துணிவுடன் முன்னெடுக்கவேண்டும்.

நீதி சமாதான ஆணையத் தலைவர் அருட்பணி. அ.பி. ஜெயசேகரம்.

## மனமாற்றம் கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்தும்

### - திருத்தந்தை 16ம் பெனடிக்ற் -

கிறிஸ்தவர்கள் நாளாந்தம் மனமாற்றம் அடைந்து இறைவன் பால் தம் வாழ்வை இட்டுச்செல்லும்போது கிறிஸ்தவ ஒன்றிப்பு தானாக மலரும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தெரிவித்தார்.

புனித பவுலினுடைய மனமாற்றம் அவருடைய வாழ்விலும் திருச்சபையின் வரலாற்றிலும் ஏற்படுத்திய தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தந்தை தனது கருத்தை வெளியிட்டார். மனமாற்றம் என்பது கிறிஸ்து எனக்காகவே மரித்து உயிர்த்தார் என்பதையும், எனக்குள் என்னோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதையும் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்வதாகும் என்று கூறிய திருத்தந்தை, மன்னிப்பின் சக்திக்கு தன்னை விட்டுக்கொடுத்து, பாவத்திலிருந்து விடுபட்டு இறை அன்புக்குள் சிக்கிக்கொள்வதே மனமாற்றவாழ்வாகும் என்றும் குறிப்பிட்டார்.

அப்படியான வாழ்வுக்கு தம்மை மாற்றிக்கொள்வோருக்கு ஒன்றிப்பு கடினமான விடயமல்ல என்றும் அவர் கூறினார். கடந்த மாதம் 18ம் திகதி முதல் 25ம் திகதி வரை அனுசரிக்கப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வுகளின் இறுதியில் திருத்தந்தை இக்கருத்தை வெளியிட்டார்.



## திருத்தந்தைக்கென்று புதிய இணையத்தளம்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களுக்கென்று பிரத்தியேகமான ஒரு இணையத்தளம் ஒன்று அண்மையில் வத்திக்கானினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருத்தந்தையினுடைய செய்திகளும் அவர் பற்றிய நிகழ்வுகளும் இவ்விணையத்தளத்தில் உடனுக்குடன் வெளியிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஆங்கிலம் உட்பட நான்கு மொழிகளில் இவ்விணையத்தள செய்திகள் வெளிவருகின்றன. வாசகர்களின் நன்மை கருதி இவ்விணையத்தளத்தின் விலாசத்தை இங்கே தருகிறோம்.
www. youtube.com/vatican

## யாழ். மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வார நிகழ்வுகள்

யாழ் மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரத்தையொட்டி கடந்த மாதம் 18ம் திகதி முதல் 25ம் திகதி வரை பல செப ஒன்றுகூடல்களும் கருத்தரங்குகளும் நடைபெற்றன. யாழ் மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு – பல் சமய உரையாடல் ஆணைய இயக்குனர் அருட்பணி ஏ. பி. திருமகன் அடிகளும், யாழ். கிறிஸ்தவ ஒன்றியத் தலைவராகிய அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி. எஸ். ஸ்ரீபன் அடிகளும் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

குருக்கள் துறவிகளுக்கென இடம்பெற்ற கருத்தரங்கில் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் சிறப்புரை வழங்கினார். கிறிஸ்தவ ஒன்றிப்பில் ஈடுபடுவோர் எத்தகைய பண்புகளை கொண்டிருக்க வேண்டும் என்பதை அவர் தனது அனுபவங்களுடன் சிறப்பாக எடுத்துரைத்தார்.

## அழைத்தல்

இறைமகனின் அன்னையாக கடவுள்
உம்மை அழைத்தபோது
“இதோ உமது அடிமை” என்று தாழ்மையுடன் பதிலளித்தீர்

குழந்தை யேசுவை கருவில் சுமந்தவாறு
அதே தாழ்ச்சியுடன், தொலை தூரம் பயணித்தீர்
இறை மகனை ஈன்றெடுக்க மாட்டுத் தொழுவமே
கிடைத்தபோதும், நீர் மனம் தளரவில்லை.
பல மாசில்லா குழந்தைகளின் உயிரை
ஏரோது பலிகொண்ட போதும்
இறைசித்தம் என்று உம்மகனை காக்க
மௌனமாகவே துயரடைந்தீர்.
இயேசுவின் வாழ்க்கைப் பயணத்தில், அவரின் இன்னல்கள்
அனைத்திலும், வளர்ப்புத் தந்தையாம் சூசையின்
துணையுடன் நீரும் பங்கெடுத்தீர்.
“எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி தலைசாய்த்த
யேசுவின் சிலுவையடியில் கண்ணீரோடும்
பொறுமை காத்தீர்
யேசு உயிர்ப்பார் என்று சிலுவையடியில் நீர்
நின்றபோதும் அடக்கம் செய்யப்பட்டபோதும்
உமக்கு தெரிந்திருக்க முடியுமா தாயே?

இத்தனை தூரம் தொடர்ந்த உமது பொறுமையை
தாழ்ச்சியை, இறைசித்தம் என்று ஏற்றுக்கொள்ளும்
பண்புகளை எமக்கும் தாரும் அன்னையே.
இயேசுவைப் போல நீதிக்காக குரல் கொடுக்கவும்
இறை சித்தம் ஏற்று மக்களின் மீட்பிற்காக
மரணிக்கவும் அதன்மூலம் உயிர்த்தெழுதல்
என்ற மாபெரும் வெற்றியை அடைந்த
இயேசுவிடம் எமக்காகவும் பரிந்து பேசும்
உம்மைப் போல சிலுவையடியிலும் பொறுமையுடன் காத்திருக்க!

நித்திலா

### பு(து)த்தகம் கிடைக்கப்பெற்றோம்

## மனத்திரை மேகங்கள்

### நெடுந்தீவு முகிலனின் கவிதைத் தொகுப்பு

பாதுகாவலன் உட்பட பத்திரிகைகள், சஞ்சிகைகளை தனது புதுக்கவிதைகளால் அலங்கரிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த வி.முகிலன் அவர்களின் கவிதைகள் ‘மனத்திரை மேகங்கள்’ என்ற கவிதைத் தொகுப்பு நூலாக அண்மையில் வெளியிடப்பட்டது. முழுக்க முழுக்க புதுக்கவிதைகளைத் தாங்கியுள்ள இப்புத்தகம் கவிதைப் பிரியர்களுக்கும், வளரும் எழுத்தாளர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமே.

**விலைவாசிப்பத்தினி எப்போது கற்பழிக்கப்பட்டாளோ?**
**வறுமைக் குழந்தைகளுக்கு தந்தை... யார்?**
**என்றே தெரியவில்லை**

**பாதுகாவலன் சார்பில் நெடுந்தீவு முகிலனை வாழ்த்துகின்றோம்.**

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த 18.01.2009 இதழில் வெளிவந்த
அமரர்
திரு. மனுவேல்பிள்ளை
வேதநாயகம்
அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி தவறுதலாக 31ம் ஆண்டு என்று பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர்




குரு : கடைசியாக எப்போ பாவசங்கீர்த்தனம் செய்தாய்?
பையன் : முதல் நன்மை பெற முன்னர்.
குரு : எப்போ முதல் நன்மை பெற்றாய்?
பையன் : பாவசங்கீர்த்தனம் செய்த பிறகு.

★★★

ஒருவர் : கிரிக்கட்டில் 40 ரன்களுக்கு 4 விக்கட் மாதிரி, எங்கட பாதர் பிரசங்கம் சொன்னால் 40 நிமிசத்துக்கு 4 இறைவார்த்தை தான் வரும்.

★★★

மாணவர்கள் : பாதர். ரியூசன் சென்ரரில் ஞாயிறு பூசை வைச்சால் எங்களுக்கு வசதியாயிருக்கும்.

பங்குக்குரு : அது சரி. இன்னும் கொஞ்சக் காலம் போக கோயிலில் ரியூசன் கிளாஸ் வைச்சா வசதியாயிருக்கும் எண்டு சொல்லுவியள்.

★★★

மகன் : அம்மா! காணிக்கை போட காசு தாங்கோ.
அம்மா : என்னட்ட சில்லறை இல்லை.
மகன் : காணிக்கையில தாள் காசு போடக்கூடாதாம்மா?

★★★

## வாசகர் கருத்து

### அருட்பணியா? அருட்தந்தையா?

பாதுகாவலனில் குருக்களை ‘அருட்பணி’ ( அருட்பணியாளர் என்ற பதத்தின் சுருக்கம்) என்று குறிப்பிடுகிறீர்கள். ஆனால் குருக்களை ‘அருட்தந்தை’ என்று அழைக்கும்போது ஏற்படும் உறவு முறை அருட்பணி என்பதில் இல்லை. வெறும் பணியாளர்களாகவே நின்று தந்தைக்குரிய பங்கெடுக்கும் தன்மையிலிருந்து குருக்கள் விலகிநிற்கும் மனநிலையை அருட்பணி என்ற சொற்றொடர் சுட்டிக் காட்டுகிறது என்பது எனது அபிப்பிராயம். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ம. நித்திலா

சகோதரி நித்திலாவின் கருத்துக்கு நாம் பாதுகாவலன் வாசகர்களிடம் இருந்தே கருத்துக்களை அறிய விரும்புகிறோம். இது பற்றிய உங்கள் கருத்துக்களை வாசகர் கருத்துப் பகுதிக்கு எழுதி அனுப்பி வையுங்கள். பாதுகாவலன் இதழ் பற்றிய ஏனைய உங்கள் கருத்துக்களையும் இப்பகுதிக்கு எழுதலாம்.

- ஆசிரியர்


## நீங்காத நினைவுகளுடன்

### 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணுலகில் 25 . 08 . 1964

விண்ணுலகில் 21 . 12 . 2008



### அமரர் வின்சன் இஸ்ராயேல் மோகன்றாஜ்

(யேர்மன்)

“இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற்கொள்ளும்”

“நீர் இன்றே என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்கு சொல்கிறேன்” (லூக்கா 24:42-43)

கடந்த 21.12.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்பு சகோதரன் றாஜனின் துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி எமக்கு ஆறுதல் கூறி செபித்த எம் உற்றார், உறவினர்கள், றாஜனின் நண்பர்கள், மற்றும் யாழ்/ திருமுழுக்கு அருளப்பர் ஆலய (சஞ்சுவான் கோவில்) பங்குத்தந்தை, பங்கு மக்களுக்கும், டி மசனட் இறையியல் குழுமத்தினர்க்கும் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட அருட் சகோதரிகளுக்கும் வழிபாட்டு நிகழ்வை மேற்கொண்ட யாழ்/ புனித வின்சன் டீ போல் மத்திய சபை செயற்குழுவினர்க்கும் எமது இதய நன்றிகளை கூறி நிற்கின்றோம்.

**இறைவன் என்றென்றும் போற்றப்பெறுவாராக**

பிரிவால் துயருறும்
தாய் - தங்கமணி வின்சன் இஸ்ராயேல்
சகோரர்கள் - வி. அன்ரன் டேவிட்
சகோதரிகள் - மலர் மரியதாசன், றஞ்சி யேசுதாசன்
டெய்சி தவராசா, மேரி யசிந்தா

36/3 கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

Advt-08/09

## எம் உறவுகளின் விடுதலை...

உடலங்கள் தொடர்ச்சியான கடும் ஷெல் தாக்குதலினால் இறுதிச்சடங்குகள் செய்யமுடியாத ஒரு அவல நிலை! மேற் சொல்லப்பட்ட தரவுகள் யாவும் பதிவு செய்யப்பட்டவை மட்டுமே. இவற்றை விட இன்னும் பலர் இறந்தும் காயப்பட்டும் இருப்பது அறியமுடிகிறது. எமது மக்கள் எந்த வேளையிலும் அச்சம் பிடித்தவர்களாக தற்காலிக பதுங்கு குழிகளுக்குள் தமது அன்றாட வாழ்வை கழிக்கின்றார்கள்.

உண்ண உணவும் ஏனைய அத்தியாவசிய தேவைகளும் இன்றி அவர்கள் பேரவலத்திற்குள் வாழ்கின்றார்கள். இந்நிலையில் சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள் காத்துவரும் மௌனம் தாங்கொணா வேதனையில் ஆழ்த்துகின்றது.

அனைத்து மக்களும் அழியும் வரை இவர்களது மௌனம் தொடரப்போகின்றதா? ஆகையால் உண்ணாவிரதிகளாகிய நாம் அனைவரும் இணைந்து உங்களிடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம.

வன்னியில் நிலவும் பேரவலத்தை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட சகல தரப்புக்களையும் வேண்டிநிற்கின்றோம்.

நாம் அனைவரும் இப்போருக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றோம். நீதியான அரசியல் தீர்வொன்றை முன்வைத்து பேச்சுவார்த்தை மூலம் அமுல்படுத்துமாறு சம்மந்தப்பட்ட சகல தரப்பினரையும் வேண்டி நிற்கின்றோம்.

## இடம்பெயர்ந்த மக்களை ஆயர் சந்தித்தார்



முடிவின்றித் தொடரும் போரின் பெருந்தாக்கங்களால் பாதிக்கப்பட்டு மரணப்பீதியோடு நெடுந்தூரம் கால் நடையாய் நடந்து வந்து மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள திருக்குடும்ப கன்னிய மடத்திலும், றோ.க.த. பாடசாலையிலும் தஞ்சம் புகுந்துள்ள 1300க்கு அதிகமான மக்களை எமது ஆயர் அவர்கள் கடந்த 23.01.2009 வெள்ளிக்கிழமை மாலை சந்தித்தார். இச்சந்திப்பின் போது ஆயர் இல்ல நிதி முகாமையாளர் அருட்பணி ஜே.பி. அன்ரனிதாஸ் அடிகளாரும், யாழ் புனித மரியாள் பேராலய உதவிப்பங்குத் தந்தை அருட்பணி சில்வெஸ்டர்தாஸ் அடிகளாரும் உடனிருந்தனர். அன்று மாலை 3.30 மணிக்கு அங்கு சென்ற ஆயரை அப்பகுதி இராணுவ அதிகாரிகள் வரவேற்று அழைத்துச் சென்றனர். தொடர்ந்து அங்கு குழுமியிருந்த கிறிஸ்தவ, இந்து மத மக்கள் யாவரும் எதுவித மத வேறுபாடுமின்றி ஆயரைக் கண்டதும் பெரும் மகிழ்வோடு ஒன்றாக கூடிவந்து கண்ணீர் மல்க தங்கள் சோகக் கதைகளைக் கூறி அவருடன் உரையாடினார்கள். பல வழிகளிலும் பெரும்பாதிப்புக்களைச் சந்தித்து புண்பட்டுப் போயுள்ள இதயங்களுடன் நீண்ட நேரம் உரையாடி தன்னாலியன்றதை செய்து தருவதாகவும் கூறினார். மிக முக்கியமாக பாடசாலைப் பிள்ளைகளின் கல்விக்கான கற்றல் உபகரணங்களை தான் தருவதாக உறுதியளித்தார். இறுதியாக சிறுவர்களுக்கென தான் எடுத்துச் சென்ற இனிப்புப் பண்டங்களை, சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்த பின்னர் சிறுவழிபாட்டுடன் அவர்களுக்கு தம் திருக்கர ஆசீர் அளித்து விடைபெற்றார்.


## யாழ் ஆயரின் உடன்...

கிழக்குப் பகுதியிலிருந்து மிருசுவில் திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும், மிருசுவில் றோ.க.த. பாடசாலையிலும், புனித நீக்கிலார் ஆலய வளாகத்திலும் தஞ்சம் புகுந்துள்ள 333 குடும்பங்களைச் சேர்ந்த 1313 மக்களுக்கு உடன் நிவாரணமாக யாழ் ஆயர் அதி.வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பணிப்புரையின் பேரில் ஆயர் நிதியிலிருந்து பெருந்தொகைப்பணத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண் பெண் பாலருக்குமான புதிய ஆடைகள், பாத்திரங்கள், உணவுப் பண்டங்கள், கடந்த 16.01.2009ல் வழங்கப்பட்டன.

இவ்வுடன் நிவாரணப் பகிர்விற்கு உதவியாக யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்பணி பெனற், அருட்பணி. ஜோர்ஜ், அருட்பணி. யாவிஸ், அருட்பணி. இரவிச்சந்திரன் ஆகியோருடன் திருச்சிலுவைக் கன்னியர்களும் ஆயர் இல்லப் பணியாளர்களும் தோழமை உறவில் கரம் சேர்த்து செயற்பட்டதை நன்றியுடன் நினைத்துக் கொள்கிறோம்.

**அருட்பணி. ஜே.பி. அன்ரனிதாஸ்**
**ஆயர் இல்லம்.**

## ‘நெஞ்சத்தின் சந்தங்கள்’ வண. தோமஸ் அடிகளாரின் நினைவாக வெளியிடப்பட்ட ஒலி இறுவட்டு



செபமாலை மாதா துறவு சபையினரால், இறை உறவின் ஆழத்திலிருந்து எழுந்த திருப்பலி மற்றும் இசை நடன பாடல்கள் அடங்கிய ‘நெஞ்சத்தின சந்தங்கள்’ என்னும் இறுவட்டு கடந்த 26-01-2009 அன்று, இச்சபையின் நிறுவுனர் வண. வ. அ. தோமஸ் அடிகளின் மறைவின் 45 வது ஆண்டு நினைவு நாளன்று அருள் ஆச்சிரமத்தில் வெளியிடப்பட்டது. இவ் இறுவட்டை வெளியிட்டு வைத்த யாழ் ஆயர் அவர்கள், ஒரு புனிதராக வரவிருக்கின்ற வண. தோமஸ் அடிகளாரின் வாழ்வும், அவருடைய ஆன்மீக எண்ணங்களும் இப்பாடல்களின் சிறப்பு என்று தெரிவித்தார்.

தென்னிந்தியாவின் பல முன்னணிப் பின்னணிப் பாடகர்களினால் பாடப்பட்டுள்ள இவ் இறுவட்டின் பாடல்களை இயற்றி, இசையமைத்திருக்கின்றார் இச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை நிமல்ராஜ் அடிகள். அருட்தந்தை. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரால் இவ் இறுவட்டு சிறப்பாக ஆராயப்பட்டு விமர்சிக்கப்பட்டது. அருள் ஆச்சிரமத்தில் இதனை ரூபா 200 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

## தொடர் உண்ணாவிரதம்

கடந்த புதன்கிழமை யாழ் மரியன்னை பேராலய வளாகத்தில் ஆரம்பமாகிய வன்னிமக்களின் விடிவிற்கான தொடர் உண்ணாவிரத போராட்டம் வெள்ளிக்கிழமை வரை அதே இடத்தில் நடைபெற்றது. 31.01.2009 சனியன்று குருநகர் புதுமைமாதா கோவிலில் தொடர்ந்தது. 01.02.2009 ஞாயிறு தொடக்கம் யாழ் குடாநாட்டின் வெவ்வேறு பங்குகளில் இவ்வுண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 01.02.2009 ஞாயிறு அன்று கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து வெவ்வேறு மறைக்கோட்ட பங்குகளில் இவ்வுண்ணாவிரதப் போராட்டம் தொடரும். இது பற்றி பங்குத்தந்தையர்கள் மூலமாக அறிவிக்கப்படுமென நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்தது.

## பசியாய் இருந்தேன் உண்ணக் கொடுத்தீர்கள்



தொடரும் போரின் கொடுமைகளால் வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து பசியும பட்டினியுமாக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் பாடசாலையிலும் தஞ்சம் புகுந்ததுள்ள 1313 பேரின் உடன் பசியாற்ற வேண்டும் என்ற எமது அவசர வேண்டுகோளை அன்புடன் ஏற்று ஒரு சிறு மணித்தியால இடைவெளிகளில் நாம் கேட்டதற்கு மேலாக (4500க்கும் மேற்பட்ட) மதிய உணவுப் பொதிகளை மிகவும் சுவையாக சமைத்து கடந்த 18.01.2009 ஞாயிறு மதியம் நேர காலத்தோடு தந்துதவிய ஆயர் இல்லத்தை சுற்றியுள்ள பங்குமக்களையும் பங்குத் தந்தையர்களையும் அருட் கன்னியர்களையும் அன்புடன் நினைத்துக் கொள்கிறோம். உதவி புரிந்தோர்:

**யாழ் பேராலய பங்கு, பாசையூர் பங்கு, நாவாந்துறைப் பங்கு, பாண்டியன் தாழ்வு பங்கு, கொய்யாத்தோட்டப் பங்கு, சுண்டிக்குளி பங்கு, யாழ் அடைக்கல அன்னை ஆலயப் பங்கு, நல்லூர் பங்கு, புனித மடுத்தீனார் குருமடம், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ் திருக்குடும்ப கன்னியர் மாகாண இல்லம், கார்மேல் கன்னியர் மடம், கோவில் வீதி, கார்மேல் கன்னியர் மடம், றக்கா வீதி, சாவகச்சேரி பங்கு.**

மேலும் இப்பெரும் பணியில் எமக்கு பக்கபலமாகவிருந்து பகிர்வில் தோழமையுடன் செயற்பட்ட அருட்பணி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம (குருமுதல்வர்), அருட்பணி. ஜோர்ஜ், அருட்பணி. யாவிஸ், அருட்பணி மதி இளம்பரிதி, பாசையூர் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி மில்வர் இவர்களுடன் கார்மேல் மட கன்னியர்களையும், திருக்குடும்ப கன்னியர்களையும் ஆயர் இல்லப்பணியாளர்களையும் நன்றியுடன் நினைத்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் இப்பசி போக்கும் பணியில் ஈடுபட்ட செயற்பணியாளர்களையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்.

**அருட்பணி. ஜே.பி. அன்ரனிதாஸ்**
**ஆயர் இல்லம்.**


## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவு நிகழ்வு

கன்னித்தமிழுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் பெருந்தொண்டு புரிந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளின் நினைவு நிகழ்வு கடந்த மாதம் 22ம் திகதி யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. அன்று காலையில் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட நன்றித்திருப்பலியும் சிறப்புரையும் இடம்பெற்றன. அடிகளாரின் நினைவாக ‘யாழ் ஜெயம்’ எழுதிய கவிதையை இங்கு பிரசுரிக்கின்றோம்.

நல்லூரின் பிரகாசம் ஞானம் காண்பீர்
நடமாடும் பல்கலையின் கழகப்பூங்கா
சொல்லரிய திருமறைக்கோர் சோதித் தீபம்
சூழ்ந்து பசிவீழ்ந்து துயர் சுமந்தோர் தஞ்சம்
கல்விகலை ஞானமுகில், கருணை அன்புக்
கனிகளிலே சுவைநுகர்ந்து கனிந்த சிந்தை
எல்லையில்லா நூற்கடலிற்குளித்து நீந்தி
ஈடரிய ஒப்பியல் அகராதி தந்தார்.

துரை ஆரோக்கியதாசன்

## விடைபெறுகிறார் திருத்தந்தையின் பிரதிநிதி



இதுவரைகாலமும் எமது நாட்டில் திருத்தந்தையின் பிரதிநிதியாக அரும்பணியாற்றிய அதிவணக்கத்துக்குரிய மாறியோ செனாறி ஆண்டகை அவர்கள் இங்கு தனது பணியை முடித்துக்கொண்டு, சிரியா நாட்டிற்கு திருத்தந்தையின் தூதுவராக பணியேற்றுச் செல்கின்றார். 2004ம் ஆண்டிலிருந்து இலங்கையில் பணியாற்றிய இவருக்கு பெப்ரவரி மாதம் 1ம் திகதியன்று தேவத்தையில் பிரியாவிடை வைபவம் நடைபெறுகின்றது.

தமிழ் மக்களின் துன்பத்தில் அதிக அக்கறை காட்டி பணிபுரிந்த ஆண்டகை அவர்களுக்கு எமது மறைமாவட்டம் சார்பாகவும், தமிழ் மக்கள் சார்பாகவும் நன்றி கூறுகிறோம். புதிய பணி சிறக்க வாழ்த்தி நிற்கின்றோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.